# சாளரம்

இளையோர் திங்கள் இதழ்

க. நகனேந்திரன்
பூநாறி மரத்தடி
கொக்குவில்

# மாணவர் கட்டுரைப் போட்டி

## பரிசு, 1000/=



கோமல் சுவாமிநாதனுடன் நேர்காணல்

அறிவுலகம்

மின்னொளியில் நடந்த உதைபந்தாட்டப்போட்டி

மாணவர்களுடன் கலந்துரையாடல்

ஏவுகணையிடமிருந்து பாடம் கற்றுக்கொள்வது எப்படி?

டென்னிஸ் வீராங்கனை ஸ்ரெபிக் கிராபிற்கு கொலை மிரட்டல்

விலை 15/-

**பொது அறிவைப் பெற்றால் முழு மனிதன் ஆகலாம்**

மே - 1994

எமது அன்பான "சாளரம்" வாசகர்களே!

## உங்களுக்கோர் மகிழ்ச்சியான செய்தி

"சாளரம்" இதழை உங்கள் வீட்டிலேயே
இருந்துகொண்டு வாங்கிப் படிக்க விரும்புகின்றீர்களா?

**அப்படியனால் ஒன்று செய்யுங்கள்**

உங்கள் முகவரியை உடனே எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.
மாதா மாதம் உங்களுக்கு வேண்டிய இதழ்கள்
உங்கள் வீட்டிற்கே வந்து சேரும்.

---

## உங்களுக்குத் தெரிந்தவை
## மற்றவர்களுக்கும் தெரிய வேண்டுமா?

"சாளரம்" இதழில் உங்கள் பக்கமென இரண்டு பக்கங்களை நாம் அறிமுகப்படுத்தவுள்ளோம். அரசியல், அறிவியல், விஞ்ஞான, தொழில் நுட்ப மற்றும் மறக்கமுடியாத பயனுள்ள சம்பவங்கள் தொடர்பாக செய்தித் துணுக்குகளாக மிகவும் தெளிவாக எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள். அவற்றை நாம் உங்கள் பக்கத்தில் பிரசுரிக்கத் தயாராகவுள்ளோம்.

அனுப்ப வேண்டிய முகவரி:-

"சாளரம்"
வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்

---

**ஓவிய வாக்கியம்**

இந்த இதழின் அட்டைப்படத்திற்கு இம்முறை ஓவியவாக்கியம் எழுதியனுப்பிவையுங்கள்.

புதுப் பதிப்பகம் - வண்ணார்பண்ணை

## இந்த இதழில் .


- ஆசிரியர் தலையங்கம்
- விளையாட்டு
- தமிழிலக்கியம் சிகரங்களைத் தொட வேண்டும் (பேட்டி)
- தெறிப்பு
- தேநீர் விருந்தும் கலந்துரையாடலும்
- ஏவுகணையிடமிருந்து பாடம் கற்றுக்கொள்வது எப்படி?
- பகலவன் பதில்கள்
- மாணவர் பக்கம்
- அறிவுலகம்
- நீங்களும் தெரிந்து கொள்ளுங்கள்
- மாணவர் கட்டுரைப் போட்டி
- அரும்புகள்
- கவிதை
- ஆங்கிலம் கற்போம்
- பொது அறிவுப் போட்டி


சாளரம்

கதவு 3 (26) காற்றலை 10

க. நகனேந்திரன்
பூநாறி மரத்தடி
கொக்குவில்

# சவால்களை எதிர்கொள்வோம்

**வ**ட பகுதியின் - குறிப்பாக யாழ்ப்பாண மாணவர்களின் கல்வித் தரம் வீழ்ச்சியடைந்துள்ளதாகக் கருதப்படுகிறது. இம்முறை வெளியான கடந்த ஆண்டின் க. பொ. த. சாதாரண, உயர்தர பரீட்சைகளின் பெறுபேறுகளைக் கொண்டே இவ்வாறு கணிப்பிடப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா பேரினவாதத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாக தமிழ் மக்களின் கல்வியும் திட்டமிட்டு நசுக்கப்பட்டு வருகின்றமை நாம் அறிந்ததே.

எமது நிலத்தை ஆக்கிரமிக்கவரும் - எம்மைக் கொல்ல வரும் இராணுவத்தை எவ்வாறு உறுதியுடன் தடுத்து நிறுத்தி யுத்தம் செய்கின்றோமோ, எமக்கெதிரான பொருளாதாரத் தடைகளை எதிர்த்து எவ்வாறு எமது பொருளாதாரத்தில் காலூன்றி நிற்கப்பாடுபடுறோமோ அதேபோல் பலவித நெருக்கடிகள், சிரமங்கள், தடைகள் மத்தியில் எமது கல்வியையும் வளர்த்தெடுக்கப் பாடுபடவேண்டியிருக்கின்கிறது.

சிறிலங்கா வான்படையினரால் பரவலான - தொடர்ச்சியான குண்டுத்தாக்குதல்கள் இடம்பெற்ற கடந்த காலங்களில்கூட எமது மாணவர்களது பரீட்சைப் பெறுபேறுகள் பாராட்டத்தக்கவைகளாகவே அமையப்பெற்றிருந்தன. சிங்களக் கல்வியாளர்களை அது ஆச்சரியப்படக்கூடச்செய்தது. குண்டுவீச்சுக்களுக்கு மத்தியில் குப்பிவிளக்குகளில் படித்துத் திறமையான பெறுபேறுகளைப் பெற்றமை சாதனைமட்டுமல்ல சிங்களப்பேரினவாதத்திற்கு சவாலான நடவடிக்கையாகவும் அமைந்தது. இந் நிலையில் நாம் மேலும் மேலும் முன்னேறிச் செல்ல வேண்டும்' இது மாணவர்களின் தனிப்பட்ட முன்னேற்றத்திற்கான செயல் என்பதைவிட ஒரு போராட்டக் கடமையென்றே கூறலாம்.

ஆனால் - இம்முறை ஏற்பட்ட 'சறுக்க' லுக்கு என்ன காரணம்? கல்வியுடன் தொடர்புடைய அனைத்துத் தரப்பினரும் இதனை ஆராய வேண்டும். இதனைச் சரிப்படுத்துவதற்கான பணிகளில் முனைப்புடன் ஈடுபடவேண்டும்.

கல்வியின் பிரதான மையங்களாக விளங்கும் பாடசாலைகள் தம்மை வளப்படுத்திக்கொள்வதில் இன்னமும் பல முயற்சிகளை அவசரமாகவும், அவதானமாகவும் மேற்கொள்ள வேண்டும்.

தோல்விக்கான காரணம் என்னவென்பதை ஆராய்வதோடு' அதனை ஒரு பாடமாக எண்ணி எதிர்கால வெற்றிக்காக இரட்டிபு முயற்சியில் ஈடுபடுவோம். எம் முன்னால் தடைகளாக எழுந்து நிற்கும் பிரச்சினைகளைச் சவால்களாக எண்ணி எதிர்கொள்வோம்.

*தாயகவிடுதலைக்குத் தம்மை அர்ப்பணிக்கும் தெரிவிற்கும், கல்வி கற்கும் உரிமைக்கும் இடையில் நாம் என்றுமே முரண்பாட்டைக் கற்பிக்க முயலவில்லை. இரண்டுமே எமது சமூகத்தின் வாழ்வியக்கத்திற்கு இன்றியமையாதவை. போரும், கல்வியும் இணைந்த ஒரு வாழ்வு, இன்று எமது வரலாற்றுத் தேவையாக உள்ளது. எமது போராட்டம் கல்விக்குக் கவசமாக இருப்பது போல கல்வியும் எமது போராட்டத்திற்கு காப்பரணாக நிற்கவேண்டும். எமது விடுதலைப் போராட்டத்தின் உன்னதத்தை உணர்ந்து கொள்ளும் வகையில் மாணவ சமூகத்திற்கு ஒரு விழிப்புணர்வை ஊட்டுவது எமது கல்விமான்களின் தேசிய கடமைப்பாடாகும்.*

*எமது இயக்கம் விடுதலைப்போரை முன்னெடுத்து வரும் அதேவேளை கல்வித்துறையின் மேம்பாட்டிற்காக ஆக்கபூர்வமான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அதற்கான அமைப்புக்களையும் கட்டியெழுப்பி வருகின்றது,*

*தமிழீழ தேசியத் தலைவர்*
**வே. பிரபாகரன் அவர்கள்**

# மின்னொளியில் நடந்து முடிந்த உதைபந்தாட்டப் போட்டி

ஆதரவற்ற சிறுவர்களின் வளர்ச்சி நிதிக்காக யாழ் "ராசி சில்க்ஸ்" ஸ்தாபனத்தினர் யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்தி குழுவின் அனுசரணையுடனும் ஒரு சில யாழ். தொழிலதிபர்களின் ஒத்துழைப்புடனும் தொடர்ச்சியாக அதாவது கடந்த மாதம் 7 ஆம் நாள் தொடக்கம் 14 ஆம் நாள் வரை மின்னொளியில் யாவரும் பாராட்டத்தக்க வகையில் வெகு விமரிசையாக உதைபந்தாட்டப் போட்டி ஒன்றினை நடாத்தியுள்ளனர்.




டுக்கழகம், அராலி மாவத்தை விளையாட்டுக்கழகம், புங்குடுதீவு அம்பாள் விளையாட்டுக்கழகம், நாவாந்துறை சென்மேரிஸ்விளையாட்டுக்கழகம், அளவெட்டி விநாயகர் விளையாட்டுக்கழகம், திருமலை நட்சத்திர விளையாட்டுக்கழகம், வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகம் ஆகியவற்றின் அணிகள் அழைப்பின் பேரில் இப்போட்டியில் கலந்து கொண்டன.

யாழ் புனித யாகப்பர் ஆலய புனர் நிர்மாண நிதிக்காக குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தினரால் நடாத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டம் அண்மையில் சென் பற்றிக்ஸ் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றபோது ஆட்டம் முடிவடைவதற்கு இரு நிமிடங்கள் மாத்திரம் இருக்கையில் இரு அணி வீரர்களுக்கிடையில் ஏற்பட்ட சச்சரவில் பார்வையாளர்களும் கலந்துகொண்டதினால் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது. இதன் விளைவாக இவ்வாட்டத்தில் கலந்துகொண்ட குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகமும் மைலன்காடு ஞான முருகன் விளையாட்டுக்கழகமும் இப்போட்டியில் பங்குபற்றும் வாய்ப்பை இழந்தன.

இப்போட்டித் தொடரின் இறுதியாட்டம் கடந்த 18 ஆம் திகதி பல்லாயிரக்கணக்கான இரசிகர்கள் மத்தியில் இடம்பெற்றபோது சென். அன்தனீஸ் விளையாட்டுக்கழக அணி அதனை எதிர்த்தாடிய யாழ். பல்கலைக்கழக அணியை 5:2 என்றகோல்கள் கணக்கில் வென்று இப்போட்டியில் சம்பியனானது.

ஆட்டம் இரவு சரியாக 8.35 க்கு ஆரம்பமானது. 9 மணிக்கு சென். அந்தனீஸ் அணி வீரன் றோய் அடித்த பந்தை ஆனல்ட்என்ற வீரன் தலையால்தட்டி முதல் கோலைப் பெற்றுக்கொடுத்தார்.

யாழ். மாவட்டத்தில் 1982 ஆம் ஆண்டு புத்தூர் கிழக்கு, ஸ்ரீ விக்கினேஸ்வரா விளையாட்டு மைதானத்தில் மின்னொளியில் நடத்தப்பட்ட உதைபந்தாட்டப்போட்டியை அடுத்து இரண்டாவது தடவையாக மின்னொளியில் நடாத்தப்பட்ட இப்போட்டியில், இன்று யாழ் குடாநாட்டில் உதைபந்தாட்டத்தில் முன்னணியில் திகழும் பிரபல்யமான கழகங்களான பாஷையூர் சென். அன்தனீஸ் விளையாட்டுக் கழகம், யாழ் பல்கலைக்கழக விளையாட்

9.30 மணிக்கு சென் அன்தனீஸ் அணி வீரன் சின்னறோய் சிறப்பாக ஆடி இரண்டாவது கோலை பெற்றுக் கொடுத்தார். அந்த வேளை 9.31 க்கு நடுவரின் தீர்ப்பை ஆட்சேபித்த பல்கலைக்கழக அணிவீரன் ராஜேன் நடுவரினால் எச்சரிக்கை செய்யப்பட்டு மஞ்சள் அட்டையும் காட்டப்பட்டார்.

9.42 க்கு சென். அன்தனீஸ் அணிவீரன் அன்னாத்துரை மூன்றாவது கோலை தமது அணிக்குப்

பெற்றுக் கொடுத்தார். ஆட்டம் முடிவுறும் நேரம் நெருங்க நெருங்க இரு அணி வீரர்களினதும் ஆட்ட வேகம் இரட்டிப்பாகியது. 9.56க்கு பல்கலைக் கழக அணிவீரன் ஹென்றீசன் நிலான் வெகு சாதுரியமாக ஆடி தனது அணிக்கான முதலாவது கோலை பெற்றுக் கொடுத்தார். இவ்விதம் கோல் அடிக்கும் போது எதிர்பாராத விதமாக காலில் ஏற்பட்ட வலியினால் மைதானத்தை விட்டு வெளியேறினார். அவரின் இடத்தை வீரன் முரளி நிரப்பினார்.

மீண்டும் சென். அன்தனீஸ் வீரன் எவ்ரன் 10.01க்கு நாலாவது கோலைத் தனது அணிக்குப் பெற்றுக் கொடுத்தார். 10.05க்கு பல்கலைக்கழக அணிக்கு கிடைத்த பெனால்ட்டி உதையை வீரன் சிசில் வெகு நிதானமாக அடித்து தனது அணிக்கு இரண்டாவது கோலைப் பெற்றுக்கொடுத்தார்.

ஆட்டம் நிறைவு பெறுவதற்கு 8 நிமிடங்கள் மாத்திரம் இருக்கையில் சென். அன்தனீஸ் வீரன் எலிங்டன் விவேகமாக ஆடி ஐந்தாவது கோலைப் பெற்றுக் கொடுத்தார். ஆட்டம் 10.10க்கு முடிவுற்றது.

வெற்றி தோல்வி எவ்விதம் அமைந்திருந்த போதிலும் இவ் இரு அணிகளும் ஆட்டத்தின்போது வெகு கண்ணியமாகவும், கட்டுப்பாட்டுடனும், ஆடியமையினால் இரசிகர்களின் பாராட்டுதலைப் பெற்றார்கள். மேலும் இந்த இரு அணிகளினதும் பயிற்றுனர் யாழ். உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் திரு. வி. கிளபேட் அந்தோனிப்பிள்ளை என்பது விசேட அம்சமாகும்.

இவ் ஆட்டத்திற்கு பிரதம நடுவர்களாக G. M. செபஸ்தியாம்பிள்ளை அவர்களும், உதவி நடுவர்களாக திருவாளர்கள் V. திருஞானசம்பந்தர், M. K. விமலராஜா ஆகியோரும், மேலதிக நடுவராக கப்டன் D.A.M. குணசிங்கம் அவர்களும் கடமையாற்றினார்கள்.

இப் போட்டித் தொடரில் வெள்ளிக் கிழமை நடைபெறவிருந்த 3 ஆம் இடத்திற்கான தெரிவு ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆடவிருந்த நாவாந்துறை சென். மேரீஸ் விளையாட்டுக் கழக அணி சமூகமளியாததினால் வதிரி டயமன்ஸ் அணிக்கு "வோக் ஓவர்" முறையில் வெற்றி கொடுக்கப்பட்டது.

சென்மேரிஸ் அணிக்கும் பல்கலைக்கழக அணிக்கும் இடையில் இதற்குமுன் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் பல்கலைக்கழக அணி வெற்றியீட்டியது. அவர்கள்வெற்றியை ஆட்சேபித்து சென். மேரிஸ் அணி பல்கலைக்கழக அணியினரால் முதலில் கொடுக்கப் பட்ட பட்டியலில் இல்லாத ஒருவர் அன்றைய ஆட்டத்தில் கலந்துகொண்டார் என முறையீடு செய்திருந்தனர். அதனை விசாரணை செய்த போட்டிக்குழுவினர் அவர்கள் முறைப்பாட்டை நிராகரித்தமையினாலேயே சென். மேரீஸ் அணியினர் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற 3 வது இடத்திற்கான போட்டியில் கலந்துகொள்ளவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாட்டம் இடம்பெறாததினால் இரசிகர்களை திருப்திப்படுத்தும் முகமாக போட்டிக்குழுவினரால் ஒழுங்குசெய்யப்பட்ட சிநேகபூர்வ ஆட்டத்தில் சென் அன்தனீஸ் "B" பிரிவு அணியை எதிர்த்து வதிரிடயமன் அணி ஆடியது. இரு அணிகளும் தலா இரு கோல்களைப் போட்டதினால் ஆட்டம் வெற்றிதோல்வியின்றி முடிவுற்றது. இவ் ஆட்டத்திற்கு பிரதம மத்தியஸ்தராக M. K விமலராஜா அவர்களும் உதவி நடுவர்களாக திருவாளர்கள் P. R. தம்பிநாயகம் M. பிரான்சிஸ் ஆகியோரும் கடமையாற்றினார்கள்.

இறுதிநாள் நிகழ்வின் போது பிரதமவிருந்தினராக யாழ் அரசாங்க அதிபர் திரு. K. மாணிக்கவாசகர் அவர்கள் கலந்துகொண்டு பரிசில்களையும் சான்றிதழ்களையும் வழங்கினார்.

# உலக விளையாட்டு

## கிரிக்கற்

மேற்கிந்தியதீவு அணிக்கும் இங்கிலாந்து அணிக்கும்இடையே நடந்த 65 ஆவது கிரிக்கற்டெஸ்ற் போட்டியில் மேற்கிந்திய தீவு அணியின் வீரர் பிறையன் லாறா ஒரே இனிங்ஸில் 375 ஓட்டங்கள் எடுத்து புதிய உலக சாதனையை நிகழ்த்தியிருக்கிறார். மேற்கிந்திய தீவுகளின் முன்னாள் கிரிக்கற் அணிக் கப்டன் கார்பீல்ட் சோபர்ஸ் ஒரே இனிங்ஸில் 365 ஓட்டங்கள் எடுத்து படைத்த சாதனையை தற்போது பிறையன்லாறா தகர்த்து புதிய சாதனை படைத்துள்ளார்.

1957, 58 ஆம் ஆண்டுகளில் கிங்ஸ்டனில் நடந்த டெஸ்ற்போட்டிகளில் பாகிஸ்தான் அணிக்கு எதிரான சாதனையை ஏற்படுத்தினார் சோபர்ஸ். சோபர்ஸ் படைத்தசாதனையை தற்போது முறியடித்து புதிய சாதனையைபடைத்துள்ள லாறா என்ற 24 வயதான இளைஞர். கடந்த ஆண்டு தான் முதன் முறையாக தன்கிரிக்கற் வாழ்வில் முதல் சதம் போட்ட இளம்

வீரர் லாறா இவ்வளவு சீக்கிரம் உலக சாதனை படைத்தது குறிப்பிடத்தக்கது.

தனது சாதனையை இனி முறியடிக்கும் சக்தி ஒரே ஒருவருக்கு மட்டுமே தற்போது உண்டு. அவர் இந்தியாவின் டெண்டுல்கார் என சூச்சமாகப் பதில் கூறியுள்ளார். லாறா ஒரு இளம் உலக சாதனையாளர்.

❀ பாகிஸ்தானின் கிரிக்கற் அணியில் இருந்து பிரபல ஆட்டக்காரர் ஜாவிட் மியாண்டாட்டை நீக்கியதில் தாம் மறைமுகமாக ஈடுபட்டதாக வந்திருக்கும் செய்தியை பாகிஸ்தானின் முன்னாள் கிரிக்கற்றின் அணித்தலைவர் இம்ரான்ஹான் மறுத்துள்ளார்.

வேகப்பந்து வீச்சாளர் வாஸீம் அஹ்ரம் அணித் தலைவராக இருக்க வேண்டும் என்பதை மட்டுமே தாம் கூறியதாக இம்ரான் சொன்னார்

கிரிக்கட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்த மியாண்டாட் தற்போது பெனாஸிர் பூட்டோவின் வேண்டுகோளின்படி மீண்டும் அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது

## உதைபந்தாட்டம்

1998, ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டில் நடைபெறப்போகும் உலகக்கோப்பைக்கான உதை பந்தாட்டத்தொடரில் கலந்து கொள்ளப் போகும் நாடுகளின் எண்ணிக்கையை 24 இல் இருந்து 32 ஆக உயர்த்த வேண்டுமென எழுந்திருக்கும் கோரிக்கை குறித்து மே- 20 ஆம் நாள் தாம் சுவிற்சிலாந்து நாட்டில் நடக்கவிருக்கும் உலக உதைபந்தாட்டச் சமுகக் கூட்டத்தில் முடிவு செய்யப்படவுள்ளது.

1998 ஆம் ஆண்டு நடைபெறப்போகும் போட்டியில் 32 நாடுகள் கலந்துகொள்ள முடிவுசெய்யப்பட்டால் அதையும் சிறப்பாக நடாத்த தாம் தயாராக இருப்பதாக பிரான்சும் அறிவித்துள்ளது.

உதைபந்தாட்டப் போட்டியில் கலந்து கொள்ள நூற்றுக்கு அதிகமான நாடுகள் ஆர்வம்கொண்டிருப்பதால் இறுதிப் போட்டித்தொடரில் கலந்து கொள்ளும் நாடுகளின் எண்ணிக்கையை அதிகரிக்கத் திட்டமிட்டு வருகிறது. 2002 ஆம் ஆண்டு உலககோப்பைக்கான உதைபந்தாட்டத்தொடரை ஜப்பானும் தென்கொரியாவும் இணைந்து நடாத்த முன்வைத்திருக்கும் யோசனையை தாம் பரிசீலித்து வருவதாக உலகளாவியபந்தாட்டச் செயற்குழு உறுப்பினர் பீற்றர் வேலப்பன் கூறியிருக்கிறார்.

உதை பந்தாட்டப்போட்டியில் காலத்தாலும் அழியாதகாவியம் என வர்ணிக்கப்படும் பீலே தனது 53 வயதில் தாம் மீண்டும் திருமணம் செய்துகொள்ளப் போவதாக அறிவித்துள்ளார். 1,285 கோல்கள் அடித்து சாதனைபடைத்து, 1977 இல் கால்பந்தாட்டத்திலிருந்து ஓய்வு பெற்ற பீலே தற்போது மூன்றாவது தடவையாக திருமணம் செய்யவுள்ளார்.

## கூடைப்பந்து

கூடைப்பந்துப் போட்டியில் முதலாவது ஆட்டக்காரர் அமெரிக்காவின் மைக்கேல்ஜோர்டன் கூடைப்பந்து போட்டியிலிருந்து ஓய்வு பெற்றாலும் கூட தொடர்ந்து முதலாம் தரம்தான் கூடைப்பந்து ஆட்டத்தில் அல்ல விளம்பரத்துறையில் 1993 ஆம் ஆண்டு விளம்பர கவர்ச்சி கொண்டவர் என்பதாக விளம்பரத்துறையின் மிக முன்னணிப் பத்திரிகை "அட்வடிசிங்யேதினப்" ஜோர்டனைத் தேர்ந்தெடுத்துள்ளது. தொடர்ந்து ஜோர்டனுக்கு விளம்பரமூலம் பணம்கொட்டுகிறது அதனால்தான் புதிதாக நுழைந்திருக்கும் பேஸ்போல் விளையாட்டில் சாதனை படைப்பது தற்போதைய எண்ணம் என்கிறார் ஜோர்டன்.

## டெனிஸ்

டெனிஸ் விளையாட்டில் பெண் வீராங்கனைகளில் முதல் தரம் ரொபிக் கிராபிற்கு கொலை மிரட்டல் வந்துள்ளது. இவ்வாரம் ஜேர்மனியில் ஹம்பேர்க் நகரில் நடைபெறும்ஆட்டத்தில், ரொபிக் கலந்து கொண்டால் அவர் தாக்கப்படுவார் என அடையாளம் தெரியாத ஒருவர் கடித மூலம் எச்சரித்துள்ளார்

கடந்த ஆண்டு ரொபிக்கு சவால்விடும் மோனிக்கா சலஸ் ரொபியின் ரசிகர் ஒருவரால் கத்தியால் குத்துப்பட்டதால்தாம் இம்முறை ரொபியைத்தாக்குவோம் என மோனிகாவின் ரசிகர்பட்டாளம் தற்போதைய முயற்சியில் இறங்கியிருக்கிறது தொடர்ந்து ஜேர்மனியின் ஹம்பர் நகரில் விளையாடும் ரொபிக்கு பாதுகாப்பு நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

## குத்துச்சண்டை

உலகின் பிரபல குத்துச்சண்டை வீரர்களில் ஒருவரான பிரைட்லிற்ஸ்ரோன் வெள்ளிக் கிழமை (06.05.94) யன்று லண்டன் மருத்துவமனையில் காலமானார்.

பிரிட்டிஷ் குத்துச் சண்டை சம்பியன் போட்டியில் கலந்து கொண்ட ஸ்ரோன் றிக்சி பண்டோனுடன் போதும் போது 10 ஆவது சுற்றில் தரையில் சாய்ந்தார் பண்டோனின் தொடர் தாக்குதலால் ஸ்ரோனின் தலையில் பலத்த அடிபட்ட நிலையில் சிகிச்சை ,பயனளிக்காமல ஸ்ரோன் உயிர் துறந்தார்

எனவே மனிதனை மனிதரே அடித்து வீழ்த்தும் குத்துச்சண்டையை தடைசெய்ய வேண்டும் என பிரிட்டனில் கோரிக்கை எழுந்துள்ளது.

## மீண்டும் மைக்கல் டைசன்

அமெரிக்காவில் சிறையிலிருந்து வரும் பிரபல குத்துச்சண்டை வீரர் மைக்கல் டைசன் தாம் அடுத்த ஆண்டு மே மாதம் அளவில் விடுதலை பெற்றதும் தொடர்ந்தும் குத்துச்சண்டைப்போட்டியில் ஈடுபட திட்டமிட்டுவருவதாக கூறியுள்ளார்.

இதற்காக சிறையில் தினமும் இருமுறை உடற்பயிற்சி செய்து வருவதாக டைசன் சொன்னார் டிசிறி என்ற 18வயதுப் பெண்ணை கற்பழித்த குற்றத்திற்காக சிறைத்தண்டனை அனுபவித்து வருகிறார் டைசன்.

க. நகுலேந்திரன்
ஆநாறி மரத்தடி
கொக்குவில்

# தமிழிலக்கியம் சிகரங்களைத் தொடவேண்டும்

**— கோமல் சுவாமிநாதன் —**



தமிழகத்தின் நாடக இயக்குநர், நடிகர், 'அனல்காற்று', 'ஒரு இந்தியக் கனவு' ஆகிய திரைப்படங்களை எழுதி இயக்கியவர், மற்றும் கே. பாலச்சந்தர் இயக்கி பாராட்டுப் பெற்ற 'தண்ணீர் தண்ணீர்' படத்தின் கதாசிரியர் என்பதை எல்லாம் விட 'சுபமங்களா'வின் ஆசிரியர் என்ற வகையிலேயே திரு. கோமல் சுவாமிநாதனை ஈழத்து இலக்கிய ஆர்வலர்களுக்கு அதிகம் அறிமுகம்.

தமிழ்நாட்டில் வெளிவரும் ஏராளமான வர்த்தகரீதியான, வாசகர்களின் மலினமான இரசனைக்குத் தீனியிடும்விதமான பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஒருபுறமும், மக்களுக்கு விளங்காமல் மக்கள் மத்தியிலிருந்து அந்நியப்பட்டு நிற்கும் புத்திஜீவிகள் நடத்தும் ஒரு சில இதழ்கள் மறுபுறமும் இருக்க, இவற்றுக்கு மத்தியில் மக்களுக்கு விளங்கக்கூடிய விதத்தில் தரமான இதழ்கள் வெளிவரவேண்டும் என்ற நோக்கில் தாம் 'சுபமங்களா'வை வெளியிடுவதாக இவர் கூறுகிறார். அப்பணியில் கோமல் அவர்கள் ஓரளவு வெற்றியடைந்து வருவதாகவே நாமும் கருதுகின்றோம்.

அரசியல்தான் தனது இலக்கியம் எனக் கூறும் இவர் கடந்த மாதம் ஒரு இலக்கியப் பயணத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வந்திருந்தார். 'மானத்துடன் உயிர் வாழ்வதற்கான போராட்டம் நடக்கின்ற மண்ணிலிருந்து தான் உயிர்த்துவமான கலை, இலக்கியங்கள் தோன்றமுடியும்' என கொழும்பில் நடைபெற்ற இலக்கியக் கருத்தரங்குகளிலும் அவர் கூறியமை குறிப்பிடத்தக்கது. இவர் யாழ்ப்பாணம் வந்திருந்த போது சாளரம் இதழுக்கு வழங்கிய நேர்காணலை இங்கு தருகிறோம்.

**தங்களின் இலங்கை வருகை குறித்த நோக்கம் என்ன?**

இலங்கையில் தமிழ் இலக்கியங்களும் மற்றும், கலைவடிவங்களும் ஒரு புதிய எழுச்சியைப் பெற்றிருக்கிறதென நான் கேள்விப்பட்டேன். அது எப்படி இருக்கிறது என்பதை நேரில் பார்த்துச் செல்வதற்காகவே வந்தேன். அது தான் நான் இங்கு வந்ததன் முக்கிய நோக்கம்.

**கொழும்பு, மட்டக்களப்பு, மலையகம் ஆகிய பகுதிகளுக்கெல்லாம் சென்று அங்குள்ள இலக்கிய நிலைமைகள் பற்றி என்ன அறிந்துகொண்டீர்கள்?**

ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தனிப்பட்ட கலாச்சார பின்னணி இருப்பதை நான் அறிந்துகொண்டேன். மலையகத்தில் எழுத்து இலக்கியம், குறிப்பாக சிறுகதை, நாவல் நல்ல வளர்ச்சியடைந்துள்ளது. நாடகங்கள் போன்றவை பின்தங்கியிருப்பதையும் பார்த்தேன். அவர்களின் - அதாவது தோட்டத் தொழிலாளர்களின் சமுதாய அமைப்பையும், வாழ்க்கை முறையையும் பார்க்கமுடிந்தது. அங்குள்ள 'லயன்கள்' எல்லாவற்றையும்கூட பார்த்து வந்தேன்.

மட்டக்களப்பில் நாடகம் போன்ற வடிவங்கள் தீவிரமாக வளர்த்துவருவதைப் பார்த்தேன். அது ஒரு மாறுபட்ட கலாச்சாரமாக எனக்குத் தோன்றிற்று. யாழ்ப்பாணம் வந்த போது வேறொரு விதமான கலாச்சாரத்தை

யும், இங்கு போருக்குப் பிறகு நடந்த சில விடயங்களையொட்டி, கலை, இலக்கிய வடிவங்கள் ஒரு புத்தெழுச்சியைப் பெற்று அந்த கலை இலக்கியங்கள் அரசியல் ரீதியான ஒரு போராட்டத்தோடு தொடர்ந்து வருவதையும் பார்க்கிறேன்.

**தமிழ் இலக்கியத்தின் தற்போதைய நிலைபற்றி என்ன கருதுகிறீர்கள்?**

இலக்கியத்தன்மைகள் குறித்து என்னிடம் பல எதிர்பார்ப்புகள் உண்டு. தமிழ் இலக்கியம் பல சிகரங்களையெல்லாம் தொடவேண்டும். அது இன்னும் தொடப்படவில்லை. ஆனால், பல முயற்சிகள் நடக்கிறது. அது போதாது. ஒரு ஒட்டுமொத்தமான வளர்ச்சியும், ஒரு பாய்ச்சலும் இருக்கவேண்டும் என்பது எனது ஆசை.

**இங்குள்ள மக்களின் போராட்ட வாழ்வு உங்கள் மனதில் எவ்விதமான உணர்வலைகளைத் தோற்றுவித்துள்ளது?**

போராட்ட வாழ்வினைப் பார்க்கும்போதும், சில விடயங்களைக் கேட்கும்போதும் ரொம்ப பரிதாபகரமானதாக இருக்கின்றது. இந்த நூற்றாண்டில்கூட இந்த மக்கள் இப்படி மின்சாரமின்றி, எந்தவிதமான அடிப்படை வாழ்க்கை வசதிகளுமில்லாமல் வாழவேண்டிய சூழ்நிலை. விலைவாசி ஏற்றங்கள், பொருளாதாரத் தடைகள், போக்குவரத்து வசதியின்மை எல்லாவற்றையும் பார்க்கும்போது மக்கள் மீதான ஒரு பரிதாப உணர்வுதான் மனதில் ஏற்படுகிறது. அதே நேரம் எல்லாக் கஷ்டங்களையும் தாங்கிக்கொண்டு மக்கள் மனவுறுதியுடன் இருப்பதையும்நான் பார்க்கக்கூடியதாக உள்ளது.

**இங்கு நடைபெற்றுக்கொண்டிருக்கும் போராட்டம் குறித்து அங்குள்ள (இந்தியாவிலுள்ள) இலக்கியவாதிகள், புத்திஜீவிகள் என்ன கருதுகின்றார்கள்,**

இங்கு நடைபெறும் போராட்டம் குறித்து புத்திஜீவிகள் அக்கறை எடுத்துக்கொள்கிறார்கள். ஆனால், இங்குள்ள அரசியல் நிலைபற்றி இயக்கங்களின் அரசியல் போக்குகள் பற்றி சில வாதப்பிரதிவாதங்கள் உண்டு. அதேசமயம் இங்கு தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கவேண்டும் ஒற்றுமை என்கிற நோக்கில் அனைவரிடமும் ஒரு ஒற்றுமை நிலவுகிறது.

**நாம் தமிழகத்திலிருந்து வெளிவரும் நூல்களை, சஞ்சிகைகளை வாசிக்கிறோம். தமிழக எழுத்தாளர்களை தெரிந்துவைத்திருக்கிறோம். தமிழ்நாட்டுப் பேச்சுவழக்குகளை புரிந்துகொள்கிறோம். குறிப்பாக, சென்னைத் தமிழைக்கூட புரிந்துகொள்ள முயல்கிறோம். தஞ்சாவூர், திருநெல்வேலி, கோயம்புத்தூர், மதுரை தமிழ்நடைகளைக்கூட வித்தியாசம் காண முயல்கிறோம். ஆனால், அங்குள்ள எழுத்தாளர், விமர்சகர்கள் ஈழத்து நூல்களைப்படித்துவிட்டு தமிழ்நடை விளங்கவில்லை என விமர்சனம் எழுதுவதை பார்க்கிறோம்.**

புரிந்துகொள்ள முடியவில்லை என்று ஒருவர் சொன்னால், அதனை நாம் மறுக்க முடியாது. அதில் ஒரு உண்மை நிலை இருக்கலாம். புரிந்துகொள்ள முடியவில்லை என்பதற்காக நாம் அதனை ஒதுக்கிவிடவேண்டும் என்கிற அவசியம் இல்லை அந்தப் பேச்சுவழக்கு ஒரு நாவலைப் படிக்கும் போது, கஷ்டமாக இருக்கும். அதனைத் திரும்பிப் படிக்கும்போது பழக்கமாகிவிடும். இன்னொரு நாவலைப் படிக்கும்போது அது இன்னும் பரிச்சயமாகிவிடும். இது பயிற்சி முறையில் வரவேண்டிய விடயம். அதற்கு பொறுமை மிகவும் அவசியம்.

**நாம் தமிழ்நாட்டிலுள்ள வட்டார வழக்கு நூல்களைக்கூட பயிற்சி மூலமாகப் புரிந்துகொள்ளும் போது, ஈழத்து அதாவது - யாழ்ப்பாணத்துத் தமிழ் விளங்கவில்லை என எப்படிச் சொல்ல முடியும்? சாதாரண தமிழக வாசகர்கள் சொல்லலாம். அங்குள்ள எழுத்தாளர்கள், விமர்சகர்கள் எப்படிச் சொல்லமுடியும்?**

விளங்கிக்கொள்ள முடியாமல் இருக்கிறது என்பது பொய் அல்லவே. விளங்கிக்கொள்ள முடியாத நிலைமை உண்டு. ஏனெனில் தமிழக வட்டார மொழிகளை எல்லாம் கடந்து ஒரு வேறொரு வடிவத்தைப் பேச்சுமொழி இங்கு அடைந்துள்ளது. முதல் வாசிக்கக் கடினமாகத்தான் இருக்கும். தொடர்ந்து ஈழத்து நூல்களைப் படிக்கும்போது அது சரியாகிவிடும்.

**அந்தப் பயிற்சி இனித்தான் வரும் என்கிறீர்களா? அப்படியானால் இதுவரை இல்லாமல் இருந்ததா?**

இப்போ பலர் ஈழத்து நூல்களை வாசிக்க ஆரம்பித்திருக்கின்றார்கள்.

**இப்போதுதான் ஆரம்பித்திருக்கின்றார்களா?**

ஆமாம். ஆரம்பித்திருக்கிறார்கள். முன்பும் இருந்தது. முன்பும் பல ஈழத்து எழுத்தாளர்களின் நாவல்கள் எல்லாம் வந்தது. முன்பும் வாசித்து வந்தார்கள். ஆனால், இப்போது அதைபற்றிய அக்கறை நிறையச் செலுத்தப்படுகிறது.

**அங்குள்ள எழுத்தாளர்கள் விமர்சகர்கள் ஆபிரிக்க கவிதைபற்றி, லத்தீன் அமெரிக்க இலக்கியம்**

பற்றியெல்லாம் பேசுகிறார்கள். அயலில் உள்ள ஒரு தமிழ் இலக்கியம் பற்றி அதிகம் தெரிந்துகொள்ள வில்லையே, முனைப்புக்கொடுக்கவில்லையே என நாம் நினைத்தால அது தவறாகுமா? கட்டாயம் அந்தத் தேடல் இருந்திருக்கவேண்டும அல்லவா?

நாங்கள் ஈழத்து இலக்கியத்தை மட்டுமல்ல அங்குள்ள தெலுங்கு, கன்னட இலக்கியம் பற்றியும் பேசுகிறதில்லை ஏனென்றால் கன்னட இலக்கியமோ, தெலுங்கு இலக்கியமோ எங்களுக்குத் தெரியாது. அது ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துவந்தால்தான் தெரியும். இன்னொன்று என்னவென்றால் மேல்நாட்டைப் பற்றிப் பேசும்போது எங்களுக்கு ஒரு பெருமை இருக்கு (சிரிப்பு) அது கூட காரணமாக இருக்கலாம் அல்லவா?

அப்படியானால் இப்போது ஈழத்து நூல்கள் அங்கு தீவிரமாக வாசிக்கப்படுகிறதா?

ஆமாம். தீவிரமான வாசிப்பு இருக்கு.

இங்கு நீங்கள் பார்த்த நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள், குறும்படங்கள் பற்றி...

எல்லாமே இங்கு நடக்கும் போராட்ட உணர்வுகளை பிரதிபலிக்கக்கூடியதாக உள்ளன. அப்படி பிரதிபலிக்கும்போது சில சமயம் பிரச்சாரத் தொனி, பிரச்சாரத்தின் குரல் சற்று ஓங்கி இருக்கலாம். அதில் தவறில்லை. ஏனென்றால் இது அஜிட் - புறொப் தியேட்டர் (Agitation and Propaganda Theatre - கிளர்ச்சியும் பிரச்சார அரங்கும்) என்பதால் அது கொஞ்சம் ஓங்கி இருக்கலாம். ஆனால் நாளை இது ஒரு முழுமையான கலை வடிவத்தை எடுத்துக் கொண்டு வேறொரு தளத்தை அடைவதற்கான அறிகுறிகள் காணப்படுகிறது.

நீங்கள் நாடகங்களைச் சொல்கிறீர்களா?

ஆமாம் நாடகங்களைத்தான் சொல்கிறேன்.

குறும்படங்கள் எப்படி இருக்கின்றன?

இரண்டொரு படங்களைப் பார்த்தேன். இங்குள்ள யதார்த்தங்களைச் சித்தரிக்கின்றன. மிக நன்றாகவே இருக்கு.

வேறு என்ன கலை நிகழ்வுகள் பார்த்தீர்கள்?

சில பாடல்களைக் கேட்டேன். எல்லாமே இந்த மக்களை போராட்டத்திற்கு தயார் பண்ணுவதாக, அவர்கள் மத்தியில் உணர்வுகளை, விழிப்புணர்ச்சியினை ஏற்படுத்துவதாகவே அமைந்துள்ளன.

உங்கள் சுபமங்களாவில் ஈழத்து இலக்கியத்திற்கு இனி முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமென்கிற எண்ணம் உள்ளதா?

ஏற்கனவே முக்கியத்துவம் கொடுத்திருக்கிறேன். இன்னும் அதிகமாக முக்கியத்துவம் கொடுப்பேன்.

தமிழகத்தின் இலக்கியப் போக்குகள் பற்றி குறிப்பாக சிற்றிலக்கியத்தின் தன்மைகள் பற்றி கூறுவீர்களா?

சிற்றிலக்கியம் ஒரு நல்ல பணியைச் செய்து கொண்டுவருகிறது. தரமான ஆழமான இலக்கியத்தினை சிற்றிலக்கியம்தான் கொடுக்கிறது. ஆனால் சிற்றிலக்கிய உலகில் இப்போது ஒரு குழுமனப்பான்மை அதிகரித்து வருகிற தன்மை ஏற்பட்டுள்ளது.

அங்கிருந்துவரும் சிற்றிலக்கிய இதழ்கள் தரமான இலக்கியங்களைத் தருகின்றன. சில சமயம் சுய விளம்பரமும் தென்படுவதை அவதானிக்க முடிகிறது.

ஆமாம். அது இருக்கு. இத்தக்குழு மனப்பான்மைகளைத் தவிர்த்துவிட்டு பொது எதிரியை நோக்கி ஒரு அணி அமைத்தார்களானால் அது நன்றாக இருக்கும்.

தமிழக மக்களின் நாளாந்த, சமூக, அரசியல் வாழ்வில் சினிமாவானது பின்னிப்பிணைந்துள்ளது. இது ஒரு ஆக்கிரமிப்பாகவே உள்ளது. கலை, இலக்கிய நடவடிக்கைகள் மூலம் அதனைப் போக்கலாம், அம் மக்களை மீட்கலாம் என்கிற நம்பிக்கை உள்ளதா?

நம்பிக்கையின் அடிப்படையில்தான் செயல்படுகிறோம். அது எப்போது நடக்கும் எப்போது மீட்டெடுப்போம் என்பதை எல்லாம் இப்போது கூறமுடியாது.

இங்குள்ள இலக்கியவாதிகளுக்கு, புத்திஜீவிகளுக்கு, மக்களுக்கு என்ன செய்தியினைச் சொல்லிச் செல்ல விரும்புகிறீர்கள்?

செய்தியெல்லாம் சொல்லிவிட்டுப்போக நான் ஒன்றும் பெரிய ஆள் இல்லை. இங்குள்ள அனுபவங்களைக் குறித்துக்கொண்டு போகிறேன். செய்திகள் நான் என்ன சார் சொல்ல முடியும்? ஏற்கனவே இங்கு போராடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்பது தெரியும். இதில் போய் நான் என்ன பெரிய ஒரு மகரிஷி மாதிரி வாழ்த்துக்கள் சொல்லவா முடியும்.

அந்த போய் இந்தப் போராட்டத்திற்கான நியாயங்களைச் சொல்வீர்களா?

ஆம்... அது பேசமுடியும். இங்குவந்து நான் அறிவுரை சொல்வதற்கு அந்த உயர்ந்த சங்கராச்சாரியார் பீடத்திலிருந்தா நான் வந்திருக்கிறேன். அதுவல்ல. இங்குள்ள விடயங்களை- ஸ்ரடி பண்ணிக்கொண்டு போக வந்திருக்கிறேன். நல்லா ஸ்ரடி பண்ணிக்கொண்டேன்.

எந்தளவிற்கு தெரிந்து கொண்டீர்கள்?

கணிசமான அளவு புரிந்துகொண்டேன். முன்பு சென்னையிலிருந்து புறப்படுகிறபோது இருந்த மன நிலையைவிட பல விடயங்களை ஏராளமான விடயங்களைப் புரிந்துகொண்டுள்ளேன்.

— விவேக்

க. நகனேந்திரன்
ஆசிரியர் மஞ்சத்தடி
கொக்குவில்

சாளரமே!

☐ சோர்ந்திடாமல் — நீ
இளையோர் திங்கள் இதழாக
இனிமை தரும் இளமையுடன்
கவி, கட்டுரைகள் பொதுவிடயங்கள்
காவியே வந்தெமை மகிழ்விக்க
மாணவர் நம் வாழ்த்துக்கள் பல .

செல்வி சுரோஜினி, யா/கன்னியர்மடம் மகா வித்தியாலயம்

**சாளரமே நீடூழி வாழ்க!**

☐ இளையோர் திங்கள் இதழான சாளரத்தில் கவிதை அறிவுலகம் பகலவன் பதில்கள் ஆங்கில மொழி கற்போம், சிறுகதை என்பவற்றை வாசித்து நானும் சக மாணவிகளும் பயனடைந்தோம். சாளரம் நீடூழி வாழ்க!

செல்வி தேனுகா பத்திநாதன், ஆண்டு 9, யா/மெதடிஸ்த பெ. உ. த. பா, பருத்தித்துறை.

**உந்துகோலாக அமையும்**

☐ மாசி, பங்குனி மாத சாளரத்தில் வெளியான மகத்தான விடையங்கள் என்னைப்போன்ற மாணவ சமூகத்திற்கு உந்துகோலாக அமையும் எனவும் சாளரம் மேலும் மேலும் புதுப் பொலிவுடன் பிரகாசித்திட எனது வாழ்த்துக்கள்.

த. சிறீனிவாசன், ஆண்டு 8B, ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை.

**சேமிக்கும் பழக்கத்தைத் தூண்டுகிறது**

☐ 'சாளரம்' இதழை பாடசாலைகளிலும் அறிமுகப்படுத்தியதால், அறிவுப் பயிரை ஊட்டும் இவ் விதழை வாங்குவதற்கு மாணவர்களாகிய எமக்கு ஆர்வம் ஏற்பட்டதுடன், நாம் ஒவ்வொரு நாளும் தின் பண்டங்களிற்கு செலவழிக்கும் (பாடசாலையின் இடைவேளையின் போது) பணத்தை சேர்த்து சாளரம் இதழை வாங்குவதன் மூலம் எமது அறிவை வளர்ப்பதுடன் சேமிப்புப் பழக்கத்தையும் மேம்படுத்தமுடிகிறது.

க. யாழினி (ஆண்டு 8) யா/விக்னேஸ்வராக்கல்லூரி, கரவெட்டி.

**நன்றி நவிலல்**

அன்புடையீர்!

☐ தாங்கள் 'சாளரம்' சஞ்சிகைமூலம் 1994-ம் ஆண்டில் நடந்த பெருந்துடுப்பாட்டப்போட்டிக்கு முதன்மை கொடுத்துப் பிரசுரித்தமைக்கு எமது நன்றியும் பாராட்டுக்களும் உரித்தாகுக.

நா. க. சண்முகநாதபிள்ளை (அதிபர்) யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

**மாணவர்களை ஊக்குவதாக அமையும்**

☐ இன்று பல்லாயிரக் கணக்கான மக்களின் அபிமானத்தை பெற்றுவரும் சாளரத்தை வாசிப்பவர்களில் நானும் ஒருவன். இந் நூலில் மாணவர்களின் பொது அறிவை விருத்தி செய்வதற்கு பொது அறிவுப்போட்டி வைக்கிறீர்கள். அது பாராட்டுக்கு உரியது. இதேபோல் பரிசுத்திட்டத்துடன் கூடிய கட்டுரைப்போட்டியும் வைத்தால் மாணவர்களை ஊக்குவதாக அமையும்.

ச. சிறிஹோமன், யாழ் இந்துக் கல்லூரி ஆண்டு 11C

**தரமான மாத இதழ்**

அன்பின் சாளரம் ஆசிரியருக்கு வணக்கம் பல.

☐ தங்களின் 'இளையோர் திங்கள் இதழ்' சாளரம் தவறாமல் படித்துவருகிறோம். எங்கள் வெளிநாட்டுக் கிளையினூடாக இது கிடைக்கின்றது. எவ்வளவு கஷ்டங்களுக்கு மத்தியிலும், இளம் சமுதாயத்தை மனதில்கொண்டு தரமான மாத இதழ் வெளியிடுவது அவ்வளவு இலகுவான விடயமல்ல. உங்களுக்கும் உங்களுக்கு உறுதுணையாக நிற்கும் அனைத்துக் கரங்களுக்கும் எமது நன்றிகள்.

இவ்விதம் தொடர்ந்து வெளிவரவேண்டும் என்று வாழ்த்தும் அதேநேரம் முடியுமாயின் அதிக பக்கங்களுடன் வெளிவர முயற்சிக்க வேண்டுகிறோம். நன்றி

கண்ணன் / லண்டன்.

## தேனீர் விருந்தும் கலந்துரையாடலும்

# பாடசாலைகளின் வளங்கள் பகிரப்படல் வேண்டும்

கடந்த 1993 ஆம் ஆண்டின் தமிழீழ பொதுக் கல்வித்தேர்வில் வெற்றிபெற்று தேசியப் பரிசில்களைப் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு தேனீர் விருந்துபசாரமொன்றினை ''சாளரம்'' வழங்கியது. கடந்த 05.05.94 அன்று வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடந்த இந்த நிகழ்வில், தற்போதைய கல்விநிலை, பிரச்சினைகள் குறித்த கலந்துரையாடலும் இடம்பெற்றது. ''சாளரம்'' ஆசிரியபீடத்தினருடன், யாழ். வலயம்-II பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம், எழுத்தாளர் திரு. செங்கை யாழியான் (கலாநிதி. க. குணராசா), யாழ் மத்திய கல்லூரி அதிபர் திரு. ந. க. சண்முகநாதபிள்ளை, உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி அதிபர் திரு. ந. அனந்தராஜ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கலந்துரையாடலின் போது, தமிழீழ மாணவர்களது கல்விநிலை, தற்போது ஏற்பட்டுள்ள வீழ்ச்சி, பாடசாலைகளின் வளங்கள், தனியார் கல்வி நிலையங்களின் அவசியம் போன்ற சகல விடயங்களும் விவாதிக்கப்பட்டன. மாணவர்கள் கூறிய கருத்துக்களைச் சுருக்கமாக முதலில் பார்ப்போம்.

ஆசிரியர்கள் போதியளவு இல்லாத காரணத்தால்தான் தனியார் நிலையங்களுக்குப் போகிறோம். பாடசாலைகள்தான் கல்வியின் அடிப்படை என்பதை நான் ஏற்றுக்கொள்கின்றோம்.

- புங்குடுதீவில் இருந்து இடம்பெயர்ந்த மாணவன்

இன்றைய சூழலில் எமக்கு பாடசாலை, தனியார் கல்வி நிலையம் இரண்டுமே முக்கியமானவைதான். பாடசாலை ஆசிரியர்கள் பாடசாலைக்கு எப்படியோ வந்தால சம்பளம் கிடைக்கிறது. அதனால் சில சமயம் வேண்டா வெறுப்பாக கற்பிக்கின்றார்கள். அதே நேரம் எல்லா ஆசிரியர்களும் அவ்வாறில்லை என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். பாடசாலையா தனியார் கல்வி நிலையமா முக்கியம் என்ற கேள்வி எமக்கு அவசியமில்லை. இதில் எது வளர வேண்டுமென்பது எமக்குப் பிரச்சினையில்லை. எமக்குத் தேவை கல்வி. அது எங்கே அதிகம் கிடைக்கிறதோ அங்கே கற்போம். தனியார் கல்வி நிலையங்களைக் கட்டுப்படுத்தினால் பாடசாலைகளால் சமாளிக்க முடியாது என்றே நான் கருதுகின்றேன்.

- ஒரு யாழ். மாணவன்



அதிக புள்ளிகள் பெற்ற மாணவி
சிவதர்சினி சிவசுப்பிரமணியம்
வேம்படி மகளிர் கல்லூரி

தனியார் கல்வி நிலையங்களின் நோக்கம் மாணவர்கள் கூடிய புள்ளிகளைப் பெற உதவுவதுதான். அதனால் அவர்கள் முன்னணி மாணவர்களுக்கே உதவுகிறார்கள். கடை மாணாக்கரை அவர்கள் கவனிப்பதில்லை. ஆனால், பாடசாலையில் கடை மாணாக்கரை கவனிக்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஆசிரியருக்கு உள்ளது.

- ஒரு யாழ். மாணவன்

நான் க.பொ.த (சாதாரண) பரீட்சைக்காக தனியார் கல்வி நிலையத்துக்குப் போகவில்லை. எமது பாடசாலையிலேயே அதற்கான தயாரிப்புக்களைச் செய்தேன். பாடசாலையில் ஆசிரியர்களால் முறையாக கற்பிக்க முடியாமைக்கு மாணவர்களும் முக்கிய காரணமாகின்றார்கள். தனியார் கல்வி நிலையத்தில் படிக்கும் சில மாணவர்கள் பாடசாலையில் குறிப்பிட்ட பாடத்தை ஆசிரியர் கற்பிக்கும்போது குழப்புகின்றார்கள். அவர்கள் முன்பே அதனைத் தனியார் கல்வி நிலையத்தில் கற்றதால், அல்லது, பின்னர் அங்கு

போய்க் கற்றுக் கொள்ளலாம் என்கிற எண்ணத்தில் ஆசிரியர் கற்பிப்பதை அலட்சியப்படுத்தும் தன்மைகளில் நடந்து கொள்கிறார்கள். எல்லோரும் தனியார் கல்வி நிலையம்போகின்றவர்கள்தானே என்கிற எண்ணத்தில் ஆசிரியகள் கற்பித்தலைக் குறைத்துக் கொள்ள வேண்டி ஏற்படுகின்றது. இது ஆசிரியர்களின் தவறல்ல. சில மாணவர்களது தவறால் ஏற்படுகின்ற நிலை. இதனால் தனியார் கல்வி நிலையத்திற்குப் போகாத மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள். என்னைப் பொறுத்தமட்டில் பாடசாலையில் கிடைக்கும் கல்வியையே போதுமான அளவு பயன்படுத்தலாம். தனியார் கல்விநிலையங்கள் இருக்கின்றன என்றதுணிவில் பாடசாலைகளை அலட்சியப்படுத்தும் மாணவர்களது செயல் தவறானது என்றே நான் கருதுகிறேன்.

- ஒரு யாழ் மாணவி

போரிச்சூழல் காரணமாக ஏற்பட்ட பாதிப்புகள் காரணமாகத் தனியார் கல்வி நிலையங்களில் கற்கவேண்டிய தேவை உள்ளது.

- சாவகச்சேரி மாணவி -

கல்வி சம்பந்தமான விடயங்களில் எவ்வித அழுத்தங்களோ தடைகளோ இருக்கக்கூடாது. தேவையான கல்வியை எங்கும் கற்கலாம் என்கிற நிலை வேண்டும். மாணவர்கள் தமது கல்வியில் முன்னேற அவர்களைச் சுதந்திரமாகக் கற்க விட வேண்டும்.


- யாழ். மாணவன் -

பரீட்சைக்கான முன்னோடியாக விசேட வகுப்புகளை பாடசாலையிலேயே பெற்றோம்.

- யாழ். மாணவி -

எழுத்தாளர் திரு. செங்கை ஆழியான் பேசுகையில் பின்வரும் விடயங்களைக் குறிப்பிட்டார்.

"இம்முறை பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் இங்குள்ள பெரிய பாடசாலைகளில் பத்து சதவீதமான வீழ்ச்சி காணப்படுவதை ஒப்புக் கொள்ளத்தான்வேண்டும். சிறுபாடசாலைகளில் கடுமையான வீழ்ச்சி காணப்படுகிறது. எங்கே தவறுள்ளது என்பதை நாம் ஆராய்தல் வேண்டும். எங்கள் வளங்களை நாம் சரியாகப் பங்கிடவில்லை. சில பாடசாலைகளில் பற்றாக்குறை நிலவுகின்றது. உதாரணமாக யா/துரைசாமி மகாவித்தியாலத்தில் 300 பிள்ளைகளுக்கு 32 ஆசிரியர்கள் உள்ளனர். கணிதத்திற்கு மூவர், இந்து கலாசாரத்திற்கு அறுவர், அனைவரும் துறைசார்ந்தவர்கள். அவர்களைப் பகிர்ந்தளிக்க அப்பாடசாலை தயாராக இல்லை. அதிகாரிகளாலும் முடியாமல் உள்ளது. (பிரதி கல்விப் பணிப்பாளரைப் பார்த்து) நீங்களும் சில நிர்ப்பந்தங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றீர்கள். இந்த நிலையில் தனியார் கல்வி நிலையங்கள் வெற்றியடைகின்றன. இந்த வீழ்ச்சிக்கு இன்னொரு காரணம் தீவக மாணவர்கள் இங்கு வந்ததும் சிலபெரிய பாடசாலைகள் அவர்களை இழுத்துக்கொண்டன. 32 மாணவர்கள் இருக்கவேண்டிய வகுப்பில் 52 மாணவர்கள் இருக்கின்றார்கள். நன்றாக இயங்கும் வேறுபாடசாலைகளில் ஒரு வகுப்பில் 6 பேர் மட்டுமே உள்ளனர். இதனையெல்லாம் சரிப்படுத்தாமல் தனியார் கல்வி நிலையங்களில் கைவைப்பதில் அர்த்தமில்லை. வளங்கள் சரியாகப் பகிர்ந்தளிக்கப்பட்டால், தனியார் கல்வி நிலையங்களின்ஆதிக்கம் தானாகவே குறையும். அதுவரை அவற்றைச் சுதந்திரமாக இயங்கவிட வேண்டும் என்பதே எனது கருத்து. இங்கே இரண்டு விடயங்கள் கவனிக்க வேண்டும்.



கலந்துரையாடலில் பங்குபற்றிய மாணவிகள்

முதலாவது - பாடசாலைகளின் வளங்கள் சரிசமனாகப் பகிரப்படவேண்டும்.

இரண்டாவது - இருக்கிற வளங்கள் முறையாகப் பயன்படுத்தப்படவேண்டும்,


பிரதிக் கல்விப்பணிப்பாளர் வேலாயுதம் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில் - சில கோட்டங்களில் மேலதிகமாகவுள்ள ஆசிரியர்களைப் பகிர்ந்தளிப்பது கடினமாகவுள்ளது. எனக்கூறினார். செங்கை ஆழியான் கூறிய வளங்கள் முறையாகப் பகிரப்படவில்லை என்ற குற்றச்சாட்டினை ஓரளவிற்கு ஒப்புக் கொள்வதாகவும் அவர் சொன்னார் சில பாடசாலைகள் இருக்கிற வளங்களைச் சரியாகப் பயன்படுத்தப்படவில்லையெனவும் குறிப்பிட்ட அவர், மிகவும் ஏழை மாணவர்கள் 438 பேர் பயிலும் சந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலத்தில் கடந்த க. பொ. த. தேர்வில் இரண்டு மாணவர்

கள் 04 - சி, 04 - டி பெற்றுள்ளதைக் குறிப்பிட்டு, அந்தப் பாடசாலையின் அதிபரைப் பாராட்டினார்.

"1948ஆம் ஆண்டு இரண்டாம் உலக யுத்த சூழலில் நான் பயின்றேன். ஆனால் நாம் அப்போது அனுபவித்ததிலும் பார்க்க அதிகமான துன்பங்களை இன்றைய மாணவர்கள் அனுபவிக்கின்றனர் என்றும் அவர் கூறினார். பாடசாலைகளில் ஆளணிகுறைவு காரணமாகவும், போரின் பாதிப்பால் பல திறமைசாலிகள் வெளியேறிவிட்ட காரணத்தாலும் கல்வியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது சில இடம்பெயர்ந்து வந்த பாடசாலைகளில் 35 மாணவர்களுடன் 30 ஆசிரியர்கள் உள்ளனர்.

அவர்களை ஆசிரியர்கள் இல்லாத பாடசாலைகளுக்கு பகிர்ந்து தரும்படி கேட்டால் கல்வித் திணைக்களம் சம்மதம் தெரிவித்தபோது அங்குள்ள அதிபரும் ஆசிரியர்களும் மறுக்கின்றனர் இவ்வாறு யாழ். மத்திய கல்லூரி அதிபர் பேச்சையில் குறிபபிட்டார்

உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி அதிபர் தமது பாடசாலையில் இம்முறை க. பொ. த (சாதாரணம்) பரீட்சையில் நல்ல பெறுபேறு கிடைத்த



கலந்துரையாடலில் கலந்துகொண்ட மாணவர்கள்

தாகவும் 98 சத வீதமான மாணவர்கள் உயர்த வகுப்பிற்குத் தகமை பெற்றுள்ளதாகவும் குறிப்பிட்டார். தாம் நடாத்திய விசேட வகுப்புகளே இதற்குக் காரணம் எனவும் அவர் சொன்னார்.

இறுதியில் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி நன்றியுரை நிகழ்த்த, "சாளர"த்தின் தேனீர் விருந்தும் கலந்துரையாடல் நிகழ்வும் இனிதே நிறைவுபெற்றது.

தமிழீழ பொதுக்கல்வித் தேர்வில் தேசிய மட்டத்தில் கூடிய புள்ளிகளைப்பெற்ற பத்து மாணவர்கள்:-

(1) சிவதர்சினி சிவசுப்பிரமணியம்
யா/வேம்படி. மகளிர் கல்லூரி, யாழ்.

(2) ஆறுமுகம் தேவராஜா வெஸ்லி தேவசுதன்
யா/ஹாட்லிக் கல்லூரி பருத்தித்துறை

(3) குகாஜினி தில்லைநாதன்
யா/வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்

(4) சுந்தரலிங்கம் காந்தரூபன்
யா/பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்

(5) சுந்தரபாலன் கௌரிசங்கர்
யா/இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்

(6) சிவசுப்பிரமணியம் சிவசாம்பவன்
யா/இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம்

(7) நாகசந்திரா கீர்த்தனன்
யா/பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்

(8) பாலச்சந்திரன் பாலமுரளி
யா/பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்

(9) சிவாணி திருஞானசம்பந்தர்
யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, யாழ்.

(10) கௌரி நவரத்தினசோதி
யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரபாடசாலை

**கோட்டமட்டத்தில் முதலாவது இரண்டாவது இடங்களைப்பெற்றவர்கள் விபரம்**

யாழ் கோட்டம்

1) பாமினி தர்மலிங்கம்,
சுண்டிக்குளி மகளிர் கல்லூரி

2) யொசானி திருவிளங்கம்
சுண்டிக்குளி மகளிர் கல்லூரி

உடுவில் கோட்டம்

1) ரஜிதா சாந்தரட்ணம்
உடுவில் மகளிர் கல்லூரி

2) சுதாஜினி புலேந்திரன்
உடுவில் மகளிர் கல்லூரி

சங்கானைக் கோட்டம்

1) நிலாணி இராமச்சந்திரன்
வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி

2) செல்வராஜா தவேந்திரன்
வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி

மானிப்பாய்ச் கோட்டம்

1) காராளசிங்கம் சசிதரன்
மானிப்பாய் இந்துக்கல்லூரி

2) ஐராங்கனி யோகராஜா
மானிப்பாய் மகளிர் கல்லூரி

கோப்பாய் கோட்டம்

1) ஜெயமாலா தர்மலிங்கம்
அத்தியார் இந்துக் கல்லூரி

2) சிவபாக்கியநாதன் சிறிசோதி
கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி

தெல்லிப்பளைக் கோட்டம்

1) திருச்செல்வி திருவாதவூரன், யூனியன் கல்லூரி

2) சர்மிளா சண்முகலிங்கம், யூனியன் கல்லூரி

கிளிநொச்சி வலயம் - பளைக்கோட்டம்

1) அபிராமி ஆறுமுகம் பளை ம. வி

2) பொன்னுத்துரை சுதன் பளை ம. வி.

(32-ஆம் பக்கம் பார்க்க)

குறைந்த விலையில்

தரம் நிறைந்த பொருட்களைப்

பெற்றுக்கொள்ள நாடுங்கள்

யாழ்ப்பாணம்

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(வரையறுக்கப்பட்டது)

# ஏவுகணையிடம் இருந்து பாடம் கற்றுக்கொள்வது எப்படி?

க. நாகேந்திரன்
சூநாறி மரத்தடி
கொக்குவில்

ஏவுகணையை நிர்மாணிக்கின்ற புத்திசாலித் தனத்தை வளர்த்துக் கொள்ள மனிதனுக்கு, அதனிடம் இருந்து சில பாடங்களைக் கற்றுக்கொள்ளும் புத்திசாலித் தனமும் இருக்கவேண்டும்.

குறி வைக்கப்பட்ட இடத்தை நோக்கிச் செல்லுகின்ற இயந்திர நுட்பம் ஏவுகணையில் இருக்கிறது. அது தன்னுடைய பாதையில் இருந்து சற்றே விலகினாலும், செல்லுகின்ற திசையில் தவறு நிகழ்வதுண்டு இப்படி அடிக்கடி நிகழ்வது உண்டு அதைச் செலுத்துகின்ற அமைப்பு தேவையான திருத்தங்களைச் செய்து, இலக்கை நோக்கிச் செல்லுகின்ற சரியான பாதையில் அதைத் திருப்பி விடுகிறோம்.

இங்கே இன்னொரு விடயத்தையும் கவனத்தில் கொள்ளவேண்டும். ஏவுகணை நிலையாக இருக்கும்போது அதன் போக்கை அது திருத்திக் கொள்ள முடியாது. இலக்கை நோக்கி அது நகர்ந்து செல்லும்போதுதான் அதனுடைய தவறுகளை அது திருத்திக் கொள்ள முடியும்.

ஏவுகணையிடம் இருந்து நீங்கள் இப்போது என்ன தெரிந்து கொள்ளப்போகிறீர்கள்? வாழ்க்கை பூராவும் உங்களுக்குப் பயன்தரக்கூடிய நல்ல படிப்பினை நீங்கள் கற்றுக்கொள்ள முடியும்.

1. வாழ்க்கையில் உங்களுக்கு இலக்கு இருக்க வேண்டும். உளவியல் நிபுணர்கள் 'இலட்சியபூர்வமான வாழ்க்கை நோக்கு' என்று சொல்வார்கள்.

2. உங்கள் இலக்கை நோக்கி நீங்கள் செல்லுகின்ற போது, ஏவுகணையைப் போலவே பாதை மாறுதல், திசைமாறுதல் போன்ற தவறுகளை நீங்களும் செய்வீர்கள்.

3 இந்தத் தவறுகளை, நீங்கள் தவறுகள் என்று ஏற்றுக்கொள்ளக் கற்கவேண்டும. இல்லாவிட்டால் திருத்தம் தேவையென்பதே உங்களுக்குத் தோன்றாமல் போய்விடும்.

4. தவறுகளை அடையாளம் கண்டு ஏற்றுக் கொண்டுவிட்டபிறகு அவற்றைத் திருத்திக் கொண்டு இலக்கு நோக்கிய சரியான பாதைக்கு நீங்கள் வந்துவிடவேண்டும். தவறுகளுக்காக ஏவுகணை எவ்வாறு குழப்பமோ, வெட்கமோ அடைவதில்லையோ அதைப்போலவே நீங்களும் நேர்ந்து விட்ட தவறுகளுக்காக குழப்பம் அடையக்கூடாது. வெட்கப்படக் கூடாது. தவறு செய்வதும், அதைக் கண்டுபிடித்து ஏற்றுக்கொள்வதும், பின்னர் திருத்திக் கொள்வதும் இலக்கை நோக்கி சரியாகச் செல்லுகின்ற வழி என்பதை ஏவுகணையைப் போலவே நீங்களும் அறிந்து இருக்கவேண்டும்.

ஏவுகணைகள் எவ்வாறு ஒரே நேர்கோட்டில் சென்று இலக்கை அடைவதில்லையோ, அதைப் போலத்தான் மனிதர்களும் நேராகவே சென்று இலக்கை அடைந்துவிட முடியாது. ஏவுகணைகளும் சரி, மனிதர்களும் சரி அந்தளவிற்கு முழுமை பெற்றிருக்கமுடியாது. அப்படியிருக்க வேண்டிய அவசியமும் இல்லை. அதனால்தான் திருத்திக் கொள்ளும் உபாயம் தேவைப்படுகின்றன.

ஏவுகணையில் அதைச் செலுத்துகின்ற அமைப்பு தவறுகளைக் கண்டறிந்து திருத்துகின்ற சாதனத்தையும் கொண்டதாக இருக்கிறது. உங்களை வழி நடத்திச் செல்லுகின்ற அமைப்புப்பற்றி உங்களுக்கு எந்த அளவுக்குத் தெரியும்?

வாழ்க்கையில் உங்களுக்கு இலக்கு இருக்கிறதா? ஒரே ஒரு முக்கியமான இலக்கைத்தான் நீங்கள் குறி வைத்திருக்கிறீர்களா? உங்களுடைய வழிகாட்டும் அமைப்பு ஒரே சமயத்தில் பல திசைகளில் அமைந்த பல்வேறு இலக்குகளை நோக்கி உங்களுக்கு வழிகாட்டுவதாக எண்ணிப் பாருங்கள். அது எவ்வளவு குழப்பமானதாக இருக்கும் என்று அப்போது உங்களுக்குப் புரியும்.

அதனால்தான் ஒரே இலக்கைக் கொண்டவன் சீக்கிரமாகவும், வெற்றிகரமாகவும் அதைச் சென்று அடைகிறான். ஒரே சமயத்தில் பல காரியங்களைச் சாதிக்க முயற்சிக்கிறவன் தடுமாற்றமான பாதையில் சென்று வாழ்க்கையை வீணாக்கிக் கொள்கிறான்.

நீங்கள் உங்கள் இலக்கை நோக்கித் தொடர்ந்து முன்னேறிக்கொண்டு இருக்கிறீர்களா? நீங்கள் அசையாமல் அப்படியே இருந்தால் உங்களுடைய வழிகாட்டும் அமைப்பு, திருத்தங்கள் எதையும் சொல்ல வழி இருக்காது. ஆகவே தொடர்ந்து சென்றுகொண்டு இருங்கள் நிற்காதீர்கள். தவறு நேர்ந்து விடுமோ என்று தயக்கம் காட்டாதீர்கள். முன்னேறிச் செல்கின்றபோது தவறு நேர்ந்தால் திருத்திக்கொண்டுவிடலாம். வாழ்க்கை என்பது சைக்கிள் விடுவதைப்போன்றது. சென்றுகொண்டிருக்கும்போதே திசையில் தவறு ஏற்பட்டால்

திருத்திக் கொண்டுவிடலாம். சைக்கிள் ஓட்டுவதை நிறுத்தினால் பலன்ஸ் தவறி, தடுமாறி விழ வேண்டி இருக்கும்.

தவறுகள் நிகழும் என்று நீங்கள் எதிர்பார்க்க வேண்டும். உடனுக்குடன் அவற்றை திருத்திக் கொள்வதற்காக கவனமாக அவற்றை கண்காணிக்கவும் வேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு உடனடியாகத் தவறைத் திருத்திக் கொள்கிறீர்களோ அந்த அளவுக்கு பாதை மாறுவதையும் தவிர்க்கலாம் இலக்கை நோக்கிய திசையினையும் சரிப்படுத்திக் கொண்டு விடலாம்.

தவறுகள் வாழ்க்கையின் ஒரு பகுதியாக நீங்கள் ஏற்றுக்கொண்டு விடுவதால் தவறுகளைப் பார்த்து குழப்பம் அடையவோ வெட்கபபடவோ அவசியம் இருக்காது. குற்ற உணர்வில் இருந்தும் விடுதலை பெறுவீர்கள். குற்ற உணர்வின் விளைவாக ஏற்படுகின்ற குழப்பங்களுக்கும் இடம் இருக்காது.

தவறுகள் வாழ்க்கையின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்ளுகின்றபோது வழிகாட்டும் அமைப்பு ஒன்று உங்களிடம் செயல் படுவதையும் ஏற்றுக் கொள்கிறீர்கள். இந்த அமைப்பு உங்களின் முக்கிய இலட்சியத்தை நோக்கி உங்களைச் செலுத்தும்.

இலட்சியத்தை நோக்கிச் செல்லுகின்ற விதத்தில் உங்களின் வழிகாட்டும் அமைப்பை எப்படி நீங்கள் செயல் படுத்தப் போகிறீர்கள்? அதற்கான வழி இதோ:

அ) உங்களுடைய வழிகாட்டும் அமைப்பு கணிப் பொறி (கம்பியூட்டர்) போன்றது. உங்களுடைய நினைவு என்கிற கணிப்பொறியில், உங்கள் இலட்சியம் பற்றிய முழுத் தகவல்களையும் கொடுங்கள். (இந்த கணிப்பொறி உங்களுடைய ஆழ்மனதான்) இப்படி நீங்கள் செய்துவிட்டால், உங்கள் இலட்சியம் என்ன என்பதை உங்களுடைய வழிகாட்டு அமைப்பு சந்தேகத்திற்கு இடமின்றித் தெரிந்து வைத்துக்கொள்கின்றது.

ஆ) உங்கள் இலட்சியம் என்ன என்பதை உங்களுடைய வழிகாட்டும் அமைப்பு முழுமையாகத் தெரிந்துகொண்ட பிறகு, இலட்சியம் நோக்கி நேராக உங்களைச் செலுத்தும். எப்படி என்று நீங்கள் அதற்கு சொல்லித்தரத் தேவையில்லை. உங்களுடைய ஆழ்மனம் என்பது பிரபஞ்ச அறிவின் ஓர் அங்கம். பிரபஞ்சத்தின் அனைத்து நிகழ்ச்சிகளையும், உங்களின் இதயத்துடிப்பில் இருந்து கிரகங்களின் சுழற்சி வரை இந்தப் பிரபஞ்ச அறிவு தான் வழிகாட்டி செயல்படுத்திக்கொண்டு இருக்கிறது. உங்கள் இலட்சியத்தை நோக்கி அது சுலபமாக உங்களை வழிநடத்திச் செல்லும்.

இ) நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் உங்களுடைய வழிகாட்டும் அமைப்பு சொல்லுகின்ற வழியில் நடந்து அதற்கு முழுமையான ஒத்துழைப்பு கொடுப்பது மட்டுந்தான். உங்கள் இலட்சியத்தை அடைவதற்குத் தேவையான ஆற்றலும் சக்தியும் உங்களுக்குக் கிடைக்கும். மன இறுக்கம் இன்றி நீங்கள் செல்லவேண்டிய திசையில் அது உங்களைச் செலுத்தும்.

ஏவுகணையின் வழிகாட்டும் அமைப்பை உருவாக்கி வைத்த மனிதன், தன்னிடமே அப்படி ஓர் அமைப்பு இருப்பதைக் கண்டுகொண்டிருக்கிறான்; தன்னுடைய இலட்சியத்தை மனப்பாடமாக தொடர்ந்து கற்பனை செய்வதன் மூலம், அதை நோக்கித் தன்னை அழைத்துச்செல்லுகின்ற வழிகாட்டும் அமைப்பு தன்னிடமே இருப்பதை அறிந்து கொண்டு இருக்கிறான்.

எம். ஆர். கோப்மேயர்

## பற்களைச் சுத்தமாக வைத்திருப்பதற்கு பற்பசை அவசியமா?

பொதுவாகப் பற்பசையில் கல்சியம் பொஸ்ற்பேற், (ஒருவகைச் சுண்ணாம்பு), வைற்கஸ்ரைல் சோப் (white castile soap) என்ற நுரைதரும் பொருள், சர்க்கரைத்திரவம் என்ற இனிமைதரும் பொருள், (வாயிற்குத் தற்காலிக புத்துணர்ச்சி தரும் பொருள்) காரமின் திரவம் பற்பசைக்கு நிறமூட்டும் பொருள் என்பன உள்ளன.

சிலபற்பசைகள் புளோரைட் என்ற மூலகத்தையும் கொண்டவை. புளோரைட் என்பது உடலிற்குத் தீங்கு இழைக்கக்கூடிய நச்சுப்பொருள்; உடலில் உள்ள இழையங்களில் நிகழும் வளர்ச்சி மாற்றத்தைக் கட்டுப்படுத்தும் இரத்தத்தில் உள்ள செவ்வணுக்களின் வாழ்நாளைக் குறைக்கும் தன்மையுடையது. ஏழு வயதிற்கு உட்பட்ட குழந்தைகள் பற்பசையை அதன் சுவைகாரணமாக உண்பதால் பாதிப்பு அதிகம். பிரிட்டிஷ்மெடிக்கல் ஜேணல் "(British medical journal)" என்ற சஞ்சிகை பற்களை வெறும் நீரையும், தூரிகையையும் (பிரஷையும்) கொண்டு துலக்குவதும், தூரிகையையும் பற்பசையையும் கொண்டு துலக்குவதும் ஒன்றுதான் என்று கூறுகின்றது.

பற்களின் ஆரோக்கியம் ஒவ்வொருமுறையும் உணவு உண்டபின்னர், நன்றாகப் பற்களைச் சுத்தம் செய்வதில் தங்கியுள்ளது. நல்லதொருபற்பசை பற்களை நன்கு சுத்தப்படுத்தும் மூலப்பொருட்களைக் கொண்டதாகவும், பற்களின் மினுக்கத்துக்கோ ஈறுகளுக்கோ தீங்கு இழைக்காததாகவும் வாயிலுள்ள தீமைதரும் நுண்உயிர்களை அழிக்கும் தன்மை பெற்றதாகவும் இருக்கவேண்டும்.

செ. சுறேஜினி யா/கன்னியர்மடம் ம.வி.

கே: மூற்காலத்தில் தோன்றிய இதிகாசங்களான பாரதம், இராமாயணம் போன்ற சிறந்த இலக்கியங்கள் எதிர்காலத்திலும் தோன்றுவதற்கான சாத்தியக்கூறுகள் உண்டா?

ப: சாத்தியக்கூறுகள் உண்டா இல்லையா என்பதைப் பற்றி ஆராய்வதைவிட, சாத்தியமாக்க வேண்டும். எமது பழந்தமிழ் இலக்கியங்களைப் பேணிப்பாதுகாக்கவேண்டும் என்பது முக்கியம்தான். எனினும், அதற்குள்ளேயே சுற்றிச் சுழன்று பெருமை பேசிக் கொண்டிருப்பதில் பயனில்லை. உலகளவில் பேசப்படக்கூடிய புதிய இலக்கியங்கள் தமிழில் தோன்ற வேண்டும். அதற்கு முயற்சிக்க வேண்டும்.

கே. கிருத்திகா, யா/மெதடிஸ்த பெண்கள் உ.த பாடசாலை பருத்தித்துறை

கே: பிரச்சினைகளுக்குப் பேச்சு வார்த்தைமூலம் தீர்வுகாணலாம் என சிறீமா கூறுகின்றாரே ஆட்சிக்கு வந்தால் அவரும் மாறி விடுவார் இல்லையா?

ப: ஆட்சியில் அமர்வதற்கு முன்பு, சிறீலங்கா அரசியல்வாதிகள் எல்லோரும் அப்படித்தான் கூறுகின்றார்கள். ஆட்சிக்கு வந்தால் பார்ப்போம் அம்மையார் என்ன செய்வார் என்று.

ஆ. பிரசன்னா, நெல்லியடி, பருத்தித்துறை.


கே: அறிவியல் வளர்ச்சியில் தமிழீழத்தின் சமகால போதைய நிலைபற்றி உங்கள் கருத்து என்ன?

ப: இருப்பதைக் கொண்டு புதியவற்றைப் படைக்கும் அறிவியல் வளர்ந்து வருகின்றது.

வி. நிசாந்தன், அன்னசத்திரலேன்

கே: நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன் (வயது 18) காதலிக்கலாமா?

ப: தம்பி நிசாந்தன் (நீங்கள் தம்பியா தங்கையா என்பதில் எனக்கு குழப்பமுள்ளது) ஆணாகவும், பெண்ணாகவும் வெவ்வேறு விலாசங்களில் உங்களது இரண்டு கேள்விகள் வந்துள்ளன. இரண்டுமே காதல் சம்பந்தப்பட்டவை. ஏன் இந்த விஷயம். ஏதேனும் ஆக்கபூர்வமாக சிந்திக்கக்கூடாதா?




ரேணுகா நாகலிங்கம். வல்வைவீதி, தொண்டைமானாறு.

கே: பெண்கள் படித்து உத்தியோகம் பார்ப்பது கூடாது என்பது சிலரின் அபிப்பிராயம், இதைப் பற்றி உங்கள் கருத்து யாது?

ப: இப்படி அபிப்பிராயம் சொல்பவர்களை அலட்சியப்படுத்துங்கள். அவர்களுக்கு பதில் சொல்ல வேண்டிய அவசியம் கூட இல்லை. எமது பெண்கள் களத்தில் ஆயுதத்துடன் நிற்கும் இக்கால கட்டத்தில் இப்படியொரு கேள்விக்கே இடமில்லை.

க. சுபாஸ்கரன் உடுப்பிட்டி அ. மி. கல்லூரி

கே: பாடசாலையில் கற்பிக்கும் குறித்த ஓர் ஆசிரியரே தனியார் கல்வி நிலையத்தில் கற்பிக்கும்போது மாணவர்கள் அதனை விரும்பிக் கற்பது ஏன்?

ப: ஒரே ஆசிரியர், ஒரே பாடம் படிப்பிக்கும் இடங்கள் தான் வெவ்வேறு. ம்... எனக்கும் புரியவில்லை சம்பந்தப்பட்ட மாணவர்களிடமே கேட்டுத் தெரிந்து கொண்டால் எனக்கும் சொல்லுங்கள்.

க. மதிவதனி, வட இந்து மகளிர் கல்லூரி

கே: யாழ். மாவட்டத்தில் பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களில் பெரும்பாலானவர்கள் வேற்று நாட்டில் சென்று தமது கல்வியைத் தொடரவும், தமது சேவையை அங்கேயே தொடரவும் விரும்புகின்றார்கள். இவர்களின் மனநிலை பற்றி உங்களின் கருத்து யாது?

ப: வேற்றுநாட்டில் மேலதிகக் கல்வித் தகைமையைப் பெற்றுக் கொண்டாலும் அதன் பலனை சொந்த நாட்டிற்கு வழங்குவதுதான் நாட்டுப்பற்று. மற்றவர்களுக்கு கருவியாகப் பயன்படுவதாக நமது கல்வி அமைதல் கூடாது.

வி. சிறீகரன் யா/ஆழியவளை சி.சி.த.க பாடசாலை

கே: 'சாளரம்' என்பதன் பொருள் யாது?

ப: சாளரம் என்பது ஜன்னல் அல்லது, பலகணி அதன் தூய தமிழ்ப்பதம் 'காலதர்' என்பதாகும்,

க. சிவநேசன் யா/ஆழியவளை சி. சி. த. க பாடசாலை

கே: டாங்கிகள், பீரங்கிகள், கவசவாகனங்கள் போன்றவற்றின் துணையுடன் இருக்கும் சிறீலங்கா இராணுவம் விடுதலைப் புலிகள் தாக்கும்போது ஏன் புறமுதுகிட்டு ஓடுகின்றனர்?

ப: சாவை எதிர்கொள்ளும் துணிச்சல், மனவுறுதி, தியாகவுணர்வு போன்ற பலமான ஆயுதங்கள் அவர்களிடம் இல்லையே அதனால் தான்

எஸ். பிரியா சீனியர் லேன், யாழ்ப்பாணம்

கே: கண்ணகி, சீதை, போன்றோர்தான் கற்புள்ள மகளிர் என்றால் மற்றவர்கள் ?

ப: யார் கற்புள்ளவர்கள், யார் கற்பில்லாதவர்கள்என்பதைப்பற்றி ஆராயும் முன்னர் "கற்பு" என்றால் என்ன என்பதைப்பற்றிய தெளிவு கசலருக்கும் அவசியம். ஒழுக்கம், கட்டுப்பாடு, நேர்மை போன்ற தன்மைகளைத்தான் கற்பு என்ற சொல் குறிக்கிறது அது ஆண். பெண் அனைவருக்குமே பொதுவானது.

# பரீட்சைகளை வெ




இன்று ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்நாளில் ஏதாவது ஒரு பரீட்சையையாவது சந்திக்க வேண்டியவனாக உள்ளான். மூன்று வயதில் முன் ஆரம்பக் கல்வியில் சேர்ந்து முறைசார் கல்வியை முடித்து பின் வேலையில் அமர்ந்து பதவி உயர்வு பெற்று உயரும் காலம் வரை நாம் அடைவுச் சோதனை, நாட்டச்சோதனை, நுண்ணறிவுச் சோதனை எனப் பல்வாறான எழுத்துப் பரீட்சைகளை எதிர்கொள்ளவேண்டியவர்களாவே உள்ளோம். இன்று பரீட்சைகள் எமது வாழ்வுடன் இரண்டறக் கலந்துள்ளதுடன் அவை எமது வாழ்வைத் தீர்மானிப்பவையாகவும் உள்ளன. தற்காலப் பரீட்சைமுறைகள் மிகவும் கடுமையான விமர்சனத்தை எதிர்நோக்குகின்றன. குறிப்பாக போட்டிப் பரீட்சைகள் மாணவரிடையே அளவுக்கதிகமான விரக்தியை ஏற்படுத்துகின்றன என அறியப்பட்டுள்ளது. ஆனாலும் தற்போது நடைமுறையிலுள்ள பரீட்சைகளுக்கு மாற்றீடான முறைகள் அறிமுகப்படுத்தப்படும்வரை இவை நம்மிடையே நிலைத்து நிற்கப்போகின்றன. எனவே இவற்றை எவ்வாறு வெற்றி கொள்வதென அறிந்து கொள்வோம்.

நீங்கள் முன்கூட்டியே திட்டமிட்டு முறையாகப் படித்து வருவீர்களாயின் பரீட்சைகளை இலகுவாக எதிர்கொள்ள முடியும். இதற்கு மாறாக இறுதி நேரத்தில் குறிப்புகளைப் பாடமாக்க (Cramming) முயற்சிப்பீர்களாயின் அது உங்கள் மனவெழுச்சியைக் குழப்புவதுடன் உங்களைக் களைப்படையவும் செய்கின்றது. இறுதி நேரத்தில் பாடமாக்குவது என்பது மிகவும் மோசமான ஓர் யுக்தியாகும். அத்துடன் இது குறைவான புள்ளிகளைப் பெற்றுக் கொள்வதற்கு வழி செய்யுமே ஒழிய ஒருபோதும் அதிக புள்ளிகளைப் பெற்றுத் தராது. ஆனாலும் பரீட்சைக்கு இரண்டு நாட்களுக்கு முன்பிருந்து உங்களது பாடத்தை மீட்டல் (Revision) செய்தல் வேண்டும். இதற்காக மூன்று மணித்தியாலங்கள் வரை ஒதுக்கினால் போதுமானது. முக்கியமான பகுதிகளை மீட்டீர்களாயின் அதனுடன் தொடர்பான எல்லாப் பகுதிகளையும் உங்கள் ஞாபகத்திற்கு கொண்டுவர முடியும். இறுதி நேர அமைதியான, மீட்டல் என்பது இறுதிநேர அவசர பாடமாக்கல் என்பதிலிருந்து வேறுபட்டது. இறுதி நேர மீட்டல் என்பது உங்கள் கவனத்தை பாடத்தின் பிரதான பகுதிகளில் குவிப்பதுடன் பரீட்சைக்கு வரும் வினாக்களை திறமையுடன் செய்யும் நம்பிக்கையையும் ஏற்படுத்துகின்றது.

நீங்கள் பாடங்கள் எல்லாவற்றையும் படித்து முடித்தபின் பரீட்சைக்கு முன்பாக குறித்த பரீட்சைக்குத் தோற்றும் உங்கள் நண்பர்களுடன் பாடம் தொடர்பாக கலந்துரையாடுவது மிகவும் நல்லது. இக்குழு சிறியதாக இருக்கவேண்டும். நிச்சயமாக நாலுபேருக்கு மேற்படக் கூடாது. குழுக் கற்றல் என்பது இவ்வளவு காலமும் நீங்கள் கற்ற விதத்திலிருந்து வேறுபட்ட முறையில் உங்கள் பாடத்தை மீட்க உதவும். உங்களுக்கும் குழுவிலுள்ள மற்றைய உறுப்பினருக்குமிடையே நல்லதொரு கருத்துப்பரிமாற்றம் செய்துகொள்ள முயற்சிக்கவும். உங்கள் எல்லோருக்கும் தெரிந்த விடயங்களை விட உங்களுக்குப் புரியாத விளக்கம் குறைவாகவுள்ள பகுதிகளைப் பற்றி கலந்துரையாடுவது நல்ல நன்மை அளிக்கும். இக்குழுவானது ஒழுங்கானதாகவும் அமைதியானதாகவும் இருத்தல் வேண்டும்.

உங்களது சாப்பாடு, நித்திரை என்பவற்றில் கவனமெடுத்துக் கொள்ளுங்கள் குறிப்பாக பரீட்சையை அண்மிக்கும் காலத்தில் படித்தல் என்னும் செயற்பாட்டால் உங்கள் நித்திரையையோ அல்லது சாப்பாட்டையோ தவற விட்டுவிடாதீர்கள். பரீட்சைக்கு முதல் நாள் இரவு வழமைபோல் நீங்கள் படுக்கைக்குச் செல்லும் நேரத்திற்குச் சென்று நல்லதோர் நித்திரைக்கு முயற்சிக்கவும். படுத்திற்குச்செல்லாதீர் நீண்டநேரம் நண்பர்களுடனோ அல்லது நண்பிகளுடனோ பொழுதைக் கழிக்காதீர். அதாவது உங்களை சரீர ரீதியாக (Physically) தயார்படுத்திக்கொள்ளுங்கள்.

# வெற்றி கொள்வோம்

அ. சந்திரகுமாரன்
B. Sc (Hons) Dip-in-Ed.
ஆசிரியர் யா/சங்கானை சிவப்பிரகாச ம. வி

பரீட்சையன்று காலை எழுந்து காலைக்கடன்களை முடித்து தியானம் செய்தல் அல்லது யோகாசனம் செய்தல் அல்லது உடற்பயிற்சி செய்தல் என்பவற்றில் ஈடுபடுவாராயின் அவற்றைச் செய்து கொள்ளவும். நன்றாகக்குளித்து தோய்த்து உலர்ந்த ஆடைகளை அணிந்து கொள்ளுங்கள். எமது சுவாத்தியத்திற்கு உகந்த உடைகளை உடுத்திக்கொள்ளுதல் மிகவும் நல்லது. இறுக்கமான உடைகளைத் தவிர்க்கவும். கழுத்துப்பட்டி அணிபவராயின் அதை மிகவும் இறுக்கமாக அணிந்து கொள்ளாதீர். உங்களுக்கு வசதியான காலணிகளை அணிந்து கொள்ளவும்.

மிகவும் இலகுவான உணவை நிதானமாக உண்டபின் பரீட்சைக்குச் செல்ல ஆயத்தமாகுங்கள். பரீட்சை மண்டபத்திற்கு பத்து அல்லது பதினைந்து நிமிடங்களுக்கு முன்னதாகச் சென்றடையக் கூடியவாறு வீட்டிலிருந்து புறப்படவும் ஆனால் மிகவும் முன்னதாக பரீட்சை மண்டபத்திற்கு சென்றடைவதைத் தவிர்க்கவும். இவ்வாறு மிகவும் முன்னதாகப் பரீட்சை மண்டபத்திற்குச் செல்வீர்களாயின் அங்கு உங்கள் நண்பர்களுடன் பரீட்சையில் என்ன வினாக்கள் வினாவப்படும் என்று வீண் விவாதத்தில் ஈடுபடுவதோடு உங்கள் நண்பர்கள் உங்களிடம் இந்த வினாவிற்கு விடை தெரியுமா என்று வினாவி உங்கள் மனநிலையைக் குழப்பிவிடக்கூடும். எனவே பரீட்சை மண்டபத்திற்கு ஓரளவு முன்னதாகச் செல்லுதலே நல்லது. இவ்வாறு ஓரளவு முன்னதாகப் பரீட்சை மண்டபத்திற்குச் செல்வதன்மூலம் உங்களை பரீட்சை மண்டப சூழலுக்கு பழக்கப்படுத்திக்கொள்ள முடியும். இது நீங்கள் பரீட்சையை சிறப்பாகத் தொடங்குவதற்கு உதவி செய்யும்.

பரீட்சைக்குச் செல்லும் போது அடையாள அட்டை, பிரவேச அட்டை, பேனா, பென்சில் போன்ற பிரதானமானவையை தவறவிடாது எடுத்துச் செல்லவும். அதே வேளை புத்தகங்கள், குறிப்புகள் அகராதிகள் போன்றவற்றை பரீட்சை மண்டபத்திற்கு எடுத்துச் செல்லாதீர். பரீட்சை மண்டபத்தினுள் ஏமாற்றும் (Cheating) நோக்கில் எதையும் எடுத்துச் செல்லாதீர். வீட்டிலிருந்து புறப்படும்போது தெய்வ ஆசியை, பெற்றோர் பெரியோரின் ஆசியைப் பெற்றுச் செல்க. சகுனம் பார்க்காதீர். நல்ல சகுனமாக அமைந்து விட்டால் அது உங்களை ஊக்குவிக்கும். கூடாத சகுனமாயின் அது உங்களுக்கு எதிர் ஊக்கியாக அமைந்துவிடும் எனவே சகுனம் பார்ப்பதை தவிர்த்துக்கொள்ளவும்.

நன்றாகப் படித்து போதிய ஆயத்தங்களுடன் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்துள்ளீர்கள். ஆனாலும் தன்னம்பிக்கையே (Self - Confident) நீங்கள் பரீட்சை மண்டபத்தினுள் கொண்டுவர வேண்டியவையில் மிகவும் பிரதானமாகும். தன்னம்பிக்கை இல்லையேல் நீங்கள் எவ்வளவு திறமையாகப் படித்து ஆயத்தம் செய்திருந்தாலும் பரீட்சையில் வெற்றி காண முடியாது. எனவே பரீட்சையை தன்னம்பிக்கையுடன் அணுகுங்கள்.

உங்கள் ஆசனத்தைக் கண்டுபிடித்து அதில் அமர்ந்து கொள்ளவும். உங்களுக்கு ஒதுக்கப்பட்ட மேசை, கதிரை என்பன எதுவித குறைபாடுகளும் அற்றவையா என உறுதிப்படுத்திக் கொள்வதுடன் உங்களுக்குப் போதிய வெளிச்சம், காற்றோட்டம் கிடைக்கின்றதா எனக் கவனித்துக் கொள்க. உங்கள் இருப்பிடத்தில் அதிக வெப்பம் அல்லது அதிக குளிர் காணப்படின் அல்லது உங்கள் சூழலில் ஏதாவது கவனத்தைச் சிதறடிக்கும் பொருட்கள் காணப்படின் அல்லது மேற்பார்வையாளரின் அறிவுறுத்தல்களைக் கேட்க முடியவில்லையெனின் அல்லது உங்களுக்கு வழங்கப்படும் வினாத்தாள்கள், எழுதும் விடைத்தாள்கள் என்பவற்றில் ஏதாவது குறைபாடு காணப்படின் மேற்பார்வையாளரின் கவனத்திற்குக் கொண்டுவரவும். நீங்கள் நல்லதொரு அனுகூலமான பரீட்சைச் சூழலுக்கு உரிமையுடையவர். உங்களுக்கு அவை கிடைக்காவிடின் நீங்கள் பரீட்சையை நன்றாகச் செய்ய முடியாது. எனவே மேற்பார்வையாளரின் உதவியுடன் நல்லதோர் பரீட்சைச் சூழலை ஏற்படுத்திக்கொள்ளவும்.


மேற்பார்வையாளரின் எல்லா அறிவுறுத்தல்களையும் மிகவும் கவனமாகக் கேளுங்கள். வினாத்தாள் வழங்கப்பட்டதும் அதிலுள்ள எல்லா அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசிக்கவும். தேவைப்படின் திரும்ப ஒரு தடவை எல்லா அறிவுறுத்தல்களையும் வாசித்துக் கொள்ளவும். ஒரு பரீட்சை நேர ஒதுக்கீட்டுத் திட்டமூலம் (Exam budget) நேரத்தைப் புத்திசாலித்தனமாகப் பங்கிடு செய்து கொள்ளுங்கள்.

# வானொலித் தொலைநோக்கி RADIO TELESCOPE

பூமிக்கப்பால் அண்டவெளியில் கிரகங்கள் நட்சத்திரங்கள், பல லட்சக்கணக்கான நட்சத்திரங்களைக்கொண்ட ஆகாயகங்கைகள் ஆகியவை, வெளிவிடும் வானொலி அலைநீளம் கொண்ட இயற்கையான கதிர்வீச்சுக்களைக் கண்டுபிடிப்பதற்குப் பயன்படுத்தப்படும் வானியற் கருவியே வானொலித் தொலை நோக்கி என அழைக்கப்படுகிறது.

முதலாவது வானொலித் தொலைநோக்கி 1937 ஆம் ஆண்டு அமெரிக்காவின் இலிநோய்ஸ் மாநிலத்திலுள்ள வீட்டன் நகரைச்சேர்ந்த குறோட்றேபர்(Groterebber)என்பவரால் உருவாக்கப்பட்டது.

வானொலித்தொலைநோக்கிகள் அளவில் வேறுபட்டவையாயினும் இரண்டு அம்சங்கள் அவை எல்லாவற்றிற்கும் பொதுவானவையாகும். பெரிய வானொலி அன்ரெனா (Rcdio Anteanna), வானொலிவாங்கி (Radio Receiver) என்பனவே அவையாகும். வானொலித் தொலைநோக்கியின்




உணர்திறன் - அதாவது வானொலி அலைகளை (இவை பலங்குன்றியவை) வெளிப்படுத்தும் மூலங்களை அளவிடுந்திறன், அன்ரெனாவின் பரப்பளவு மற்றும் அதன்நிலை, வரும் சமிக்ஞைகளைக்கண்டறிந்து அவற்றைப் பெரிதுபடுத்துவதற்கான வானொலிவாங்கியின் திறன், அவதானிப்பு மேற்கொள்ளப்படும் கால அளவு என்பவற்றில் தங்கியுள்ளது.


அண்டவெளியிலிருந்து வானொலி மூலங்கள் வெளியிடும் வானொலி அலைகள் மிகமிகப் பலம் குன்றியனவாக இருப்பதால், வானொலித் தொலைநோக்கிகள் வழமையாக மிகப்பெரிய அளவினைக் கொண்டதாகவுள்ளதுடன், மிகவும் உயர்ந்தளவில் உணர்திறன்கொண்ட வானொலி வாங்கிகள் மட்டுமே அவற்றில் பயன்படுத்தப்படுகின்றன.

மேலும் பலம் குன்றிய அண்டவெளிச் சமிக்ஞைகள் மிக இலகுவில் பூமியிலுள்ள வானொலி அலைகளால் குறுக்கீடு செய்யப்படலாம் என்பதால், மனிதனால் ஏற்படுத்தப்படும் குறுக்கீடுகளிலிருந்து வானொலித்தொலை நோக்கிகளைப் பாதுகாப்பதற்கு மிகுந்த முயற்சி எடுக்கப்படுகிறது.

குவிகைவட்ட (Parabola) வடிவிலான வானொலித்தெறிமுகப்பைக் (Reflector) கொண்ட இது "வட்டில்" (Dish) என அழைக்கப்படுகிறது. வானொலித் தொலைநோக்கியே வழமையாகக் காணப்படுவதாகும். அண்டவெளியிலிருந்து வரும் வானொலிக் கதிர்வீச்சுக்களை இந்தத் தெறிமுகப்பு ஒரு சிறிய அன்ரனாமீது குவியமைப்படுத்துகின்றது. அலைகளை ஒன்றுதிரட்டும் கருவியாக இந்தச் சிறிய அன்ரெனா செயற்படுகின்றது. இது மிகவும் உணர்




பொன் நகருக்கு அருகாமையிலுள்ள எப்பெல்ஸ்பேக் எனும் இடத்திலுள்ள 100 மீற்றர் விட்டங்கொண்ட வானொலித் தொலைநோக்கி.



அமெரிக்காவின் நியூமெக்ஸிக்கோ மாநிலத்தில் ஸொக்கொறோ எனும் இடத்தில் அமைந்துள்ள "மிகப்பெரிய அடுக்கு" தொலைநோக்கி.

திறன்கொண்ட வானொலிவாங்கி ஒன்றுடன் இணைக்கப்பட்டிருக்கிறது. மிகவும் எளியமுறையிலான வானொலித் தொலை நோக்கியில், குவிகை வட்டத் தெறிமுகப்பின் குவிமையப்புள்ளியில் ஒலிவாங்கி வைக்கப்பட்டிருக்கும். பெறப்படும் சமிக்ஞையானது கம்பிமூலமாக அண்மையில் நிலத்தில மைக்கப்பட்டிருக்கும் நிலையமொன்றிற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு பதிவுசெய்து பகுப்பாய்வு செய்யப்படும்.

வானொலித் தொலைநோக்கி ஒன்றின் செயற்திறனானது, தெறிமுகப்பின் மேற்பரப்புச் சீராக இல்லாமை, காற்று வேகம், வெப்பதட்ப மாற்றம் ஆகிய பல காரணிகளாற் பாதிக்கப்படலாம். அத்துடன் அன்ரெனா ஆகாயத்தின் பல்வேறு திசைகளுக்கும் சுழற்றப்படும்போது ஈர்ப்புச்சக்தியில் ஏற்படும் மாற்றத்தால் வானொலிக் கதிர்வீச்சுக்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.



1. தொலைதூர அண்டவெளியிலுள்ள வானொலி மூலம்.
2. உள்ளே வரும் வானொலி அலைகள்.
3. முதல் நிலை குவிகைவட்டத் தெறிமுகப்பு மேற்பரப்பு (வட்டில்).
4. உபதெறிமுகப்பு.
5. சேகரிக்கும் கருவி.
6. வட்டங்கள் (சமிக்ஞையைக் கட்டுப்பாட்டு அறைக்குள் ஆய்வு செய்வதற்காக எடுத்துச் செல்பவை).

மேற்கு ஜேர்மனியில் பொன் நகருக்கு அருகாமையிலுள்ள எபெல்ஸ்பேக் என்னும் இடத்தில் அமைந்துள்ள மக்ஸ் பிளாங்க நிலையத்தில் (Max Planck Institute) இருக்கும் அன்ரெனாவின் விட்டம் 100 மீற்றராகும். 305 மீற்றர் விட்டமும் கோளவடிவிலான தெறிமுகப்புங்கொண்ட உலகத்திலேயே மிகப்பெரிய வானொலித் தொலைநோக்கி, அமெரிக்காவில் அரஸிபோ என்னும் இடத்தில் கோர்னெல் சர்வகலாசாலையினரால் பேணப்பட்டு வருகிறது. அது பூமியிலுள்ள இயற்கையான, அதிகம் ஆழமில்லாத ஒரு பள்ளத்தினுள் அமைக்கப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக அது குறுகிய கோண அளவிலேயே சுழல முடிகிறது.

மிகப்பெரிய விட்டத்தைக் கொண்ட தெறிமுகப்பைப் பயன்படுத்துவதன் மூலம் பெறப்படும் விளைவுகளிலும் பார்க்க, அதிக எண்ணிக்கையிலான, ஓரளவு சிறிய விட்டத்தைக் கொண்ட பல அன்ரெனாக்களைப் பாவிப்பதன் மூலம் சிறந்த பெறுபேறுகளைப் பெறலாமெனக் கண்டறியப்பட்டுள்ளது. இவ்வாறான அமைப்பொன்றே உலகத்தி

திரை மற்றும் பகுப்பாய்வுத் தொகுதி.

லேயே மிகவும் சக்திவாய்ந்த வானொலித் தொலைநோக்கியெனக் கருதப்படுவதும், அமெரிக்காவின் நியூமெக்ஸிக்கோ மாநிலத்திலுள்ள சொக்கோனே நகருக்கருகில் இருக்கும் சான் அகஸ்டீன் வெளியில் அமைக்கப்பட்டிருப்பதுமான "மிகவும் பெரிய

கணனியும் பதிவு செய்யும் கருவியும்.

அடுக்கு" (Very Large Array-V. L. A) என அழைக்கப்படும் தொலைநோக்கியாகும்.

இதில் ஒவ்வொன்றும் 25 மீற்றர் விட்டம் கொண்ட 27 குவிகைவட்ட அன்ரெனாக்கள் ஒரு

ஒலிவாங்கியும் ஒலிபெருக்கிக் கருவியும்.

சீரான ஒழுங்குமுறையில் அமைக்கப்பட்டிருக்கின்றன. இதன் சக்தி 130 மீற்றர் விட்டங்கொண்ட ஒரு தனி அன்ரெனாவின் சக்திக்குச் சமமானதாகும். V. L. A ஆனது அமெரிக்க தேசிய வானொலி வானியல் அவதானிப்பு நிலையத்தினரின் மேற்பார்வையில் இயங்குவதோடு நாட்டின் எல்லா வானியலாளர்களுக்கும் அங்கு ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு வகை செய்யப்பட்டிருக்கிறது. சூரியமண்டலம், பால்வழி ஆகாயகங்கை (Galaxy) மற்றும் ஆகாயங்களுக்கு அப்பாலிருக்கும் மண்டலங்கள் ஆகியவற்றை ஆராய்வதற்கென வருடந்தோறும் இந்நிலையத்தில் 500 க்கும் மேற்பட்ட வானியலாளர்கள் பணிபுரிகின்றனர்.

# அறிவுலகம்

க. நகனேந்திரன்
பூநாறி மரத்தடி
சொக்குவில்

மா. தயாளன்,
ஹென்ஸ்மன் ஒழுங்கை, சாவகச்சேரி.

புளொரொளிர்வு (Fluoresent Tube Light) விளக்குகளில் இருந்து வரும் வெண்மையான ஒளி எவ்வாறு கிடைக்கின்றது என்பதை விளக்கவும.

புளொரொளிர்வுக்குழாய் என்று சொல்லப்படும் குழாய் விளக்குகள் (Tube Light) உண்மையில் ஏழு நிறக் கலவையினால் ஆன வெள்ளொளியல்ல. இவற்றில் உள்ள சில இரசாயனப் பொருட்கள் மின்னேற்றப்படும் பொழுது கிடைக்கும் ஒளியே புளொரொளிர்வுக் குழாய் விளக்குகளில் இருந்து பெறுகின்றோம். கண்ணாடிக் குழாயின் உட்புறத்தில், கல்சியம்டங்ஸ்ரேற், நாக சல்பைட்டு போன்றவற்றால் ஆன கலவையினால் பூசப்பட்டிருக்கும் குழாயினுள் வளி அமுக்கம் அகற்றப்பட்டு, பாதரச ஆவி நிரப்பப்பட்டிருக்கும். இதனை வெப்பமேற்றி இலத்திரன்களை வெளியேற்றுவதற்கு இழை (Filament) இருக்கும். இதில் வெளியேற்றப்படும் இலத்திரன்கள், உட்புறம் உள்ள பாதரச ஆவியின் மேல் மோதும் பொழுது, இரச அணுக்களில் இருந்து ஒருவித ஒளி உண்டாகின்றது. இது நமது கழியூதா ஒளி ஆகும். (Ultra Violet) இது நமது கண்ணுக்குத் தெரியாத ஒளிக்கதிர். இந்த ஒளி தெரியக்கூடிய வகையில் உதவுவது, குழாயின் உட்புறமுள்ள பூச்சு. இப்பூச்சில் உள்ள இரசாயனக் கலவை ஒளிர்வதனாலேயே புளோரசன்ற் குழாய் விளக்குகள், மேக்குறி விளக்குகள் ஒளிர்கின்றன. இவ்வாறு மாற்றப்பட்ட ஒளி, இரச ஆவியுடன் சேருவதற்கு அதிக மின்னழுத்தம் தேவை. இதற்கு தொடக்கி (Starter) சோக் (Choke) என்பன பயன்படுத்தப்படுகின்றன. தொடக்கியில உள்ள ஈருலோகச் சட்டம் வெப்பமேறும் பொழுது, விரிவடைந்து, சோக்கின் ஊடாகச் செல்லும் மின்னோட்டத்தைத் துண்டிக்கின்றது. அப்பொழுது, சோக், அதற்கு எதிராக அதிக வோல்ற்றளவைக் கொண்ட மின்னோட்டத்தைப் பிறப்பிக்கும் பொழுது, ஈருலோகச் சட்டம் ஒன்றையொன்று கவர்ந்து அழுத்துக்கொள்ளவதால், ஒளிர்வு உண்டாகின்றது. இக குழாய்களில் இரசத்திற்குப் பதிலாக சோடியத்தைப் பயன்படுத்தினால் இன்னும் ஒளிர்வு கூடுதலாக இருக்கும்.

ஐ. கோபாலரட்ணம் ( ஆண்டு 11)
யா/ உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி.
வல்வெட்டித்துறை

மின்பிறப்பாக்கியில் இருந்து (தைனமோ) 220V உடைய ஒரு மாற்றியை இணைக்கும்போது 220V மின்னழுத்தம் கிடைக்கின்றது. இதனுடன் இச் சுற்றில் இதே மின்னழுத்தம் உடைய இன்னோர் மாற்றியை இணைக்கும்போது, மின்னழுத்தம் குறைவாகவே கிடைக்கின்றது. இதற்குக் காரணம் என்ன?

குறைந்த மி. இ. வி உடைய தைனமோவில் இருந்து பெறப்படும் மின் இயக்கவிசையானது 220V வோல்ற்றுடையபடி கூட்டுமாற்றி ஒன்றினூடாகச் செலுத்தப்படும்பொழுது 220V மின்னியக்க விசை பெறப்படுகின்றது. இதனுடன் மேலும் இதே அழுத்தமுடைய வேறொரு மின் மாற்றி இணைக்கப்படும் பொழுது அதனூடாக மி. இ. விசையானது கொள்ளளவில் மாற்றமின்றி இருக்கும். ஆனால் வளிமுறையில் மாற்றியின் சுற்றினூடாக 220 V மின்னோட்டம் செலுத்தப்படும் பொழுது மின்மாற்றியில் உள்ள சுற்றுக்கள், மெல்லிரும்பு அகலைகளில் ஏற்படும் சக்தி இழப்பின் காரணமாக துணைச் சுற்றினூடாக வெளியேறும் மின்னியக்க விசையானது 220 V இலும்குறைவாகவே இருக்கும். அதாவது ஒரு சுற்றில் இருந்து, மற்றைய சுற்றுக்கு சக்தியை மாற்ற, மாற்றிகள் உபயோகிக்கப்படும் போது சக்தி இழப்பு (சக்தி நட்டம்) உண்டாவதன் காரணத்தினாலேயே மின்னியக்க விசையின் அளவு குறையும்.

# கேள்வி. பதில்

## ஆனந்தி

சக்தி இழப்பு பின்வரும் காரணிகளில் தங்கியுள்ளது.

1 மாற்றியின் முதற்சுற்றில் ஏற்படும் காந்தப்பாயத்தின் பொசிவு

2 மாற்றியின் சுற்றுக்கள் ஒவ்வொன்றினதும் தடைகள் (யூலின்விதிப்படி $I^2R$ யூல்செக்-1)

5 மெல்லிரும்பகணியில் ஏற்படும் சுழிப்போட்டங்கள் அரக்குவானிஸ், உரித்தாள் அல்லது இரண்டையும் கொண்டோ ஒன்றில் இருந்து மற்றது காவலிடப் பெற்ற மெல்லிரும்பின் மெல்லிய தகடுகள் பலவற்றை ஒன்றின்மேல் ஒன்றாகப்பயன் படுத்துவதன்மூலம் இச் சுழிப் போட்டங்களைக் குறைக்கமுடியும். இத்தகடுகள் காந்தப்புலத்திற்குச் சமாந்தரமாக உள்ளன.

வே. தவச்செல்வம்,
பளை மகாவித்தியாலயம், பளை.

விண்வெளி வரை செல்லும் மனிதனால் ஏன் பூமியில் ஏற்படும் சூறாவளியைத் தடுத்து நிறுத்த முடியவில்லை?

அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சியின் துரித முன்னேற்றத்தின் காரணமாக மனிதன் விண்வெளி வரை சென்று ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றான். வானிலையில் ஏற்படும் திடீர் மாற்றங்களை அறிந்து, முன்னறிவிப்புச் செய்யக்கூடிய வகையில் 1844 இல் சாமுவல் மோர்ஸ் என்ற அமெரிக்கர் அமைத்த தொலைத் தொடர்புத் தந்தி மூலம் பூமியின் பல பகுதிகளிலும் நிலவும் வானிலை மாற்றங்களை அறிந்து வானிலை அறிக்கைகளைத் தயாரித்தனர். இன்று வானிலையில் ஏற்படும் மாற்றங்களையும், அவை தொடர்பான தகவல்களையும் சேகரிக்க செயற்கைக் கோள்கள் உதவுகின்றன. இவை புயல் சூறாவளி பற்றிய முன்னறிவிப்புக்களை பூமிக்குச் சில நாட்கள் அல்லது சில மணித்தியாலயங்களுக்கு முன்னரேயே அறிவிக்கின்றன. இதன் மூலம், புயல், சூறாவளி, மழை வெள்ளம் போன்றவற்றினால் ஏற்படும் ஆபத்துக்களில் இருந்து மக்களை எச்சரிக்கவே, இந்த அறிக்கைகள் உதவுகின்றன. ஆனால் இயற்கையை மாற்றி அமைக்கும் வல்லமை மனிதனால் முடியாததொன்று. இயற்கையில் நிகழும் இத்தகைய சில தோற்றப்பாடுகள் வானிலையில் ஏற்படும் சடுதியான மாற்றங்களிலேயே ஏற்படுவதால், மனிதனால் இவை தடுத்து நிறுத்தப்பட முடியாதவை. (செல்வி க. கலாரஞ்சினியின் வினாவுக்கான விளக்கத்தையும் பார்க்கவும்)

செல்வி கலாரஞ்சினி கதிரேசு
செம்பியன்பற்று அ. த. க. பாடசாலை,
தாளையடி.

புயல் உருவாகி வீசுவது பற்றிச் சிறிது விளக்குவீர்களா?

சாதாரணமாக வீசுகின்ற காற்று மிகக்கூடிய வேகத்தில் வீசும்போது புயலாக மாறுகின்றது. புயல் காற்றுக்கள் வளிமண்டலத்தின் ஒரு பகுதியில் ஏற்படும் அமுக்க வேறுபாட்டினாலேயே உண்டாகின்றன. இது தாழ் அமுக்கம் (Depression) எனப்படும். புயல் அமுக்க வேறுபாடுகள், புவியில் ஏற்படுவது ஒரு சாதாரண தோற்றப்பாடு. பூமத்திய ரேகையை நோக்கிய அயன மண்டலப் பிரதேசங்களில் உருவாகும் புயல்கள் கடற்பரப்பின் மீதிருந்தே உருவாகின்றன. அவை தரைப்பகுதியை நோக்கி நகரும்போது, அவை பயங்கரமான சுழல் காற்றாகவும், பொங்கி எழும் கடல் அலைகளாகவும் உருவெடுக்கின்றன. இந்து சமுத்திரப் பகுதியில் திடீரென தாழ் அமுக்கம் ஏற்பட்டவுடன் அந்த இடத்தின் அமுக்கக் குறைபாட்டினை நிவர்த்தி செய்வதற்கும், நிரப்புவதற்கும் வேறு இடங்களில் இருந்து. வேகமாகக் காற்று வரும்பொழுது, அவ்வேகத்தின் காரணமாகக் காற்று சுழற்சி அடைகின்றது. குறிப்பிட்ட வேகத்துடன் காற்று வீசும் பொழுது மையம் ஏற்படுகின்றது. இதுவே புயலின் கண் எனப்படும். இந்த மையத்தில் இருந்து வெளிப்படும் வெப்பசக்தியே புயலின் வேகத்திற்கான முக்கிய காரணமாகின்றது. 200 ஐதரசன் குண்டுகளின் வெடிப்புக்குச் சமமான சக்தி, இந்தப்புயலுக்குக் கிடைக்கின்றது. இத்தகைய மாபெரும் இயற்கைச் சக்தியை எதிர்கொள்ளும் திறனை மனிதன் இன்னும் அறியவில்லை.

புவியின் மத்திய கோட்டில் இருந்து சமுத்திரப் பகுதியில் அடிக்கடி தாழமுக்கம் ஏற்படுவதன் காரணமாக வங்காளதேசம், இலங்கையின் கிழக்கு மாகாணம், வடக்கின் சில பகுதிகள் புயலினால் பாதிக்கப்படுவதைக் காணலாம்.

எஸ். சிவரத்தினம் உருத்திரபுரம்

ஓசோன் வாயுப்படை பற்றி இன்று அதிகம் பேசப்படுகின்றதே? அது எமது வளிமண்டலத்தில் இருக்கவேண்டியது அவசியம் தானா?

நீங்கள் குறிப்பிடுகின்ற ஓசோன் வாயு என்பது மூன்று மூலக்கூறுகளைக்கொண்ட ஒட்சிசன் அணுக்களே ($O_3$) இது இடி முழக்கத்துடன் மழை பெய்யும் பொழுது வளியில் உள்ள ஒட்சிசன் ஒட்சியேற்றப்படுவதாலும் கூட ஓசோன் உண்டாகலாம். ஓசோன் வாயு பூமியில் இருந்து 20.km – 30.km தூரத்தில் ஒரு படையாக அதாவது பூமியின் போர்வையாகக் காணப்படுகின்றது. ஓசோன் வாயு பின்வரும் வகையில் அனுகூலமாக உள்ளது.

1. சூரிய ஒளியில் உள்ள கழியூதாக் கதிர்களை (Ultra Violet Rays) உறிஞ்சுகின்றது.
2. இரசாயனத் தொழிற்சாலைகளில் பெற்றோல் போன்ற சுவட்டு எரிபொருட்களில் உள்ள கந்தகத்தை அகற்றுவதற்குப் பெருமளவில் ஓசோன் தேவை.
3. பழைய கார் டயர்களைப் புதுப்பிக்கவும், நூலைப் பளபளப்பாக்கவும் உதவும்
4. குளோரின் கலந்த நீரின் அருவருக்கத்தக்க சுவையைக் கூட்டவும், பக்றீரியாக்களை அழிப்பதற்கும் சிறிதளவில பயன்படும்.

ஆனால் ஓசோன் வாயு அதிகரித்தல்கூட ஆபத்துத்தான். இதன் அதிகரிப்பினால் உயிரினங்கள் அழிந்துவிடும். புரோமினுக்கு அடுத்தபடியாக விரியம் கொண்ட ஒட்சியேற்றும் கருவி ஓசோன்.

## திருத்தம்

கடந்த இதழ் அறிவுலகம் கேள்வி பதில் பகுதியில் ''வால்வெள்ளி'' தொடர்பான பதிலில் (ஐந்தாவது கேள்விக்குரிய பதில்) "இதற்கென விசேட நுணுக்குக் காட்டிகளே பயன்படுத்தப்படுகின்றன" எனப் பிரசுரமாகியிருப்பது தவறானது. "இதற்கென விசேட தொலைநோக்கிகளே பயன்படுத்தப்படுகின்றன" என்பதே சரியானதாகும். தவறினைச் சுட்டிக்காட்டியோருக்கு எமது நன்றி.

# நீங்களும் தெரிந்து கொள்ளுங்கள்

## தீயணைக்கும் முறை

தீயணைக்கும் பணியை நீரினால் இலகுவிற் செய்யலாம். தீயின்மீது ஊற்றப்படும் நீர் ஆவியாகும் செயல்முறையின்போதே வெப்பம் உறிஞ்சப்பட்டு விடுகிறது. அத்துடன் நீராவி அவ்விடத்தை நிரப்பும்போது காற்று அங்கிருந்து நீக்கப்படுகின்றது.

எனினும் எரி திரவங்கள் மற்றும் மின்சார உபகரணங்கள் தீப்பற்றிக்கொள்ளும்போது அதனை அணைப்பதற்குக் காபனீரொட்சைட், ஹேலோன் (Halone) சோடியம் இருகாபனேட் அல்லது அமோனியம் இருஐதரசன் பொசுபேற்றுப் பயன்படுத்தப்படல் வேண்டும். தீவிரமாகத் தீப்பற்றி எரியக்கூடிய சோடியம், மகனீசியம் போன்ற உலோகங்கள் தீப்பற்றிவிட்டால் அதை அணைப்பதற்கு நிச்சயமாக உலர் இரசாயனப் பொருட்களே பயன்படுத்தப்படவேண்டும்.

தீ பரவுவதைத் தடுப்பதற்கும், அதனை அணைப்பதற்கும் இதற்சௌப் பயிற்சி பெற்றவர்களைக் கொண்ட தனிப்பிரிவு உண்டு. முதலில் தீயினாற் சூழப்பட்டவர்களைக் காப்பாற்றுவதிற்தான் மும்முரமாகச் செயற்படுவர். இதேவேளை அவர்கள் நான்கு படிமுறைகளில் தீயணைப்புப் பணியை மேற்கொள்வர். இதுவரை தீ பரவாத கட்டடங்கள் அல்லது பொருட்களைப் பாதுகாத்தல், தீயைப் பரவவிடாது அதை எரியும் இடத்தினுள்ளேயே கட்டுப்படுத்தி வைத்திருத்தல், குறிப்பிட்ட இடத்திலிருந்து வெளியேறவேண்டிய நச்சுத்தன்மையும், வெப்பமும் நிறைந்த வாயுவை அல்லது புகையை மிகுந்த கணிப்புடன் வெளியேற்றிக் கொள்வதற்கான வழிகளை அமைத்தல், தீயை அணைத்தல் ஆகியவைகளே அவையாகும்.

## உலகின் சுத்தமான நகர் சிங்கப்பூர்

616 சதுர கிலோ மீற்றர் பரப்பினைக் கொண்ட சிங்கப்பூர் மலாயாக் குடாநாட்டின் தென் விளிம்பில் அமைந்துள்ளது. ஏறத்தாள யாழ்ப்பாணக் குடாநாட்டின் அரைப்பங்கு அளவுடைய சிறிய தீவு ஆகும். ஆனால் 26 இலட்சம் மக்களைக் கொண்டுள்ளது. ஒரு சதுரமைலுக்கு 10505 மக்கள் அடர்த்தியைக் கொண்டுள்ள நகர் நாடாகும். இந் நாட்டில் 76 வீத மக்கள் சீனர், 15 வீதம் மலாயர், 07 வீதம் இந்தியர், மலே, சீனம், தமிழ், ஆங்கிலம் ஆகியன இந்நாட்டின் மொழிகள். 85 வீத மக்கள் கல்வி அறிவு உடையவர்களாகக் காணப்படுகின்றனர். தனிநபர் வருமானம் 5615 டொலர்களாகும்.

ஆங்கிலேயர் ஆட்சியில் இருந்த சிங்கப்பூர் 1959இல் சுதந்திர நாடாகியது. 1963இல் மலாயா, சபா, சரவாக் ஆகிய நாடுகளுடன் இணைந்து மலேசிய ஒன்றியமானது. ஆனால் 1965இல் அந்தக் கூட்டமைப்பில் இருந்து விலகி, தன்னாதிக்கமுள்ள குடியரசாகியது. இந்நாட்டின் வருமானம் வர்த்தகத்திலேயே தங்கியுள்ளது. உலகின் சுத்தமான ஒரு நகர் இதுவாகும். வீதியில் சிறு துண்டுக் கடதாசியைக் கூட காணமுடியாது. யாராவது மறந்து வீசினாலும் தண்டத்திற்குள்ளாவர்.

## பாம்பு பற்றியது

ஒரு பாம்பு ஒரு மனிதனையோ வேறு உயிரினங்களையோ விரட்டிக் கடிப்பதில்லை. அவை முட்டை இட்டு அடைகாக்கும்போது, மனித ஆரவாரமோ வேறு மிருகங்களின் ஆரவாரமோ கேட்டால் விரட்டிச்செல்லும். ''முஜிர்'' என்ற ஒருவகைப் பாம்பு கொடிய விஷமுள்ள பாம்புகளையே கொன்று தின்னுகின்றது.

## தீச்சுடர் எப்போதும் மேலேயே எழும்புவது ஏன்?

மெழுகுவர்த்தி, நெருப்புக்குச்சி அல்லது விறகு எரியும்போது தீச்சுடர் மேல்நோக்கி எழும்புவதைக் காண்கின்றோம். ஏனெனில் மேற்குறிப்பிட்ட எரிபொருட்களில் காபனும் ஐதரசனும் அடங்கியுள்ளன. இவை எரியும்போது காபன் காற்றிலுள்ள ஒட்சிசனுடன் சேர்ந்து காபனீரொக்சைட் ஆகின்றது. அதேபோல ஐதரசனும் ஒட்சிசனும் சேர்ந்து தண்ணீராகின்றது. கூடவே இன்னும் சில வாயுக்களும் உண்டாகின்றன. எரிதல் நிகழ்ச்சியின் பயனாக இப்பொருட்கள் ஒளியையும் வெப்பத்தையும் உண்டுபண்ணுகின்றன. எரியும் வாயுக்களே தீச்சுடராகக் காட்சியளிக்கின்றன. எரியும்போது உண்டாகும் வாயுக்கள் காற்றைவிட

(24-ஆம் பக்கம் பார்க்க)

# மாணவர்
# கட்டுரைப்போட்டி

சாளரம் மாணவர் கட்டுரைப் போட்டி ஒன்றை நடாத்த முன்வந்துள்ளது.

மாணவர்கள் மட்டுமே இக்கட்டுரைப் போட்டியில் கலந்து கொள்ளலாம். கட்டுரைகள் தெளிவான கைபெழுத்திலோ, தட்டச்சில் பொறித்தோ அனுப்பப்படலாம்.

தாளில் ஒரு பக்கம் மட்டும் எழுதப்பட்டு, கையெழுத்தாயின் நான்கு பக்கங்களுக்கு மேற்படாமலும், தட்டச்சாயின் மூன்று பக்கங்களுக்கு மேற்படாமலும் கட்டுரை அமைதல் வேண்டும். கட்டுரை சமகாலத்தை மையமாகக் கொண்டிருத்தல்வேண்டும்.

கட்டுரை உங்களது சொந்த ஆக்கம்தான் என்பதை உங்கள் பாடசாலை அதிபர், அல்லது பொறுப்பாசிரியர் மூலம் உறுதிப்படுத்தப்பட்டு அனுப்புதல் வேண்டும்.

கட்டுரை எமக்கு வந்து சேரவேண்டிய கடைசி நாள் யூன் 30 ஆம் நாளாகும். சிறந்ததாகத் தெரிவு செய்யப்படும் கட்டுரைக்கு 1000 ரூபா பணப் பரிசு வழங்கப்படும். அத்துடன் அக்கட்டுரை சாளரத்திலும் பிரசுரமாகும்.

கட்டுரைத் தலைப்பு இதோ! - **மாணவரும் சமூகமும்**

கட்டுரையுடன் கீழ்க்காணும் படிவத்தை நிரப்பி இணைத்து அனுப்புதல் அவசியமானதாகும்.

கட்டுரையினை அனுப்பவேண்டிய முகவரி -

மாணவர் கட்டுரைப் போட்டி
'சாளரம்'
வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

இங்கே வெட்டவும்

---

## சாளரம்
## மாணவர் கட்டுரைப் போட்டிக்கான படிவம்

கட்டுரையாளரின் பெயர் ..............................................

பாடசாலையின் பெயர் ..............................................

வதிவிட முகவரி ..............................................

வயது ..............................................

பயிலும் ஆண்டு ..............................................

சாளரம் நடாத்தும் மாணவர் கட்டுரைப் போட்டிக்கான எனது கட்டுரையினை இத்துடன் அனுப்பியுள்ளேன். இக்கட்டுரை எனது சொந்த ஆக்கம் என்பதை உறுதிப்படுத்துகிறேன்.

ஒப்பம்:- ..............................................

திகதி:- ..............................................

மறு பக்கம்

### நீங்களும் தெரிந்து கொள்ளுங்கள்

22-ஆம் பக்கத் தொடர்ச்சி...

கனம்குறைந்தவை. அதனாற்தான் தீச்சுடரீ மேலெழும்புகிறது.

தீச்சுடரில் ஒளிதருவது, ஒளிதராதது என இருவகை உண்டு மெழுகுவர்த்தியும் விறகும் எரியும்போது எழும்பும் தீச்சுடர் ஒளிதரவல்லது. ஐதரசன் வாயுவினால் உண்டாகும் தீச்சுடர் ஒளிதராது.

## நுண்ணலை அடுப்புக்கள் எந்தளவு பாதுகாப்பினை வழங்குகின்றன

நுண்ணலை அடுப்புகள் (Micro Wave Owens) எந்தளவுக்குப் பாதுகாப்பானவை? ஆய்வுகளின்படி அவை உணவு நஞ்சூட்டப்படுவதற்கு ஏதுவாயிருப்பதுடன் பாவனையிலும் பாதுகாப்பற்றவையாகும். நுண்ணங்கிகள் சாகுமளவிற்கு உணவுப்பொருளைப் பூரணமாக அவிக்கக்கூடிய வெப்பத்தை அவை வெளிவிடுவதில்லை. அத்துடன் தொன்றுதொட்டுப் பின்பற்றப்பட்டு வரும் சமையல் முறைக்கு மாறாக இம் முறையில் சமையல் செய்யும்போது உணவுப் பொருட்களின் இரசாயனச்சேர்க்கையிலும் மாற்றமேற்பட்டுவிடுகிறது.

நுண்ணலை அடுப்புகளில் சமைக்கும்போது அது உணவிலுள்ள புரதம், மாபொருள் ஆகியவற்றின் தன்மைகளையும் மாற்றிவிடுகின்றது. எனினும் இவ்வாறான அடுப்பிற் சமைத்த உணவினால் எவ்வகைத்தாக்கம் ஏற்படும் என்பது முடிவாக அறியப்படவில்லை.

## ஒஸ்கார் விருது (OSCAR AWARDS)

திரைப்படத்துக்கும் விஞ்ஞானத்திற்குமான அமெரிக்கக் கழகத்தினரால் (American Academy of Motion Picture Arts And Science) இது வழங்கப்படுகிறது. திரைப்படக் கதாசிரியர், நடிகர், இயக்குனர் ஆகியோரின் சிறந்த சாதனையாளர்களுக்கு ஆண்டுதோறும் இவ்விருது வழங்கப்படுகிறது. 1929ஆம் ஆண்டு இவ் விருது வழங்கும் திட்டம் ஆரம்பமானது. மேற்படி கழகத்தில் (Academy) பணியாற்றிய ஒருவரின் உறவினரின் பெயரான ஒஸ்கார் என்பது சற்றும் எதிர்பாராத வகையில் இவ்விருதுக்கு வழங்கப்பட்டுள்ளது.

திரைப்பட நடிகர் மார்லன் பிறாண்டோ (Marlon Brando) நடிப்புத்துறையில் ஆற்றிய சாதனைகளுக்காகத் தொடர்ச்சியாக நான்கு ஆண்டுகள் (1951, 1952, 1953, 1954) இவ்விருதினைப் பெற்றார். இவர் 1972ஆம் ஆண்டு 'கோட் பாதர்' (God Father) என்னும் படத்தில்'கோட் பாதர்' பாத்திரத்தில் நடித்தார். அந்த ஆண்டில் சிறந்த நடிகருக்கான ஒஸ்கார் விருது இவருக்கு வழங்கப்பட்டது. ஆனால் இவர் அவ்விருதினை ஏற்கமறுத்துவிட்டார். இதற்குக் காரணம் அமெரிக்காவில் செவ்விந்தியர்களின் பரிதாபநிலை மற்றும் திரைப்படங்களில் அவர்களைச் சித்தரித்துக் காட்டும் பாணி என்பவற்றிற்கு எதிர்ப்புத் தெரிவித்ததனாலாகும்.

## சுறாமீன்கள் பற்றியது!

சுறாமீன்கள் நீரில் வசித்தாலும் அச் சுறாமீன்கள் அதிக நேரம் நீருக்கடியில் இருக்கமுடியாது. சுமார் 20 நிமிடங்கள் வரையே சுறாமீன்கள் நீருக்கு அடியில் இருக்கும். மற்றைய நேரங்களில் தண்ணீரின் மேல் மட்டத்திற்கு வந்துவிடும்.

---

மேற்படி மாணவன் / மாணவியின் இக்கட்டுரை அவரது சொந்த ஆக்கம் என்பதை உறுதிப்படுத்துகிறேன்.

ஒப்பம்:- ..........................................

(அதிபர் / அல்லது பொறுப்பாசிரியர்)

திகதி:- ..........................................

க. நகனேந்திரன்
பூநாறி மரத்தடி
கொக்குவில்

# அரும்புகள்

மாணவர் ஆக்கங்கள்

## தலைவிதியை மாற்றுவோம்

நித்தம் கேட்கும் வெடியோசைகள் - நம்
நிம்மதியைக் குலைத்து நிற்கும்
புத்தம் புதிய பாடத் திட்டங்கள் - நம்
புருவங்களைச் சுருங்க வைக்கும்.
சத்தம் எழுப்பியே இரையும் விமானங்கள் - எம்
சிந்தனையைக் கலங்க வைக்கும்.

அழுதழுது எரியும் விளக்கினிலே
ஊனலாய் எரியும் நம் கண்கள்
கூவிவரும் ஷெல்களிற்குக்
கதறியழும் மாணவச் செல்வங்கள் - நாம்
படித்திடப் புத்தகம் திறந்திட்டால்
படிக்கும் ஆர்வமா எமக்குவரும்?

நாடெங்கும் மரண ஓலங்கள்
நிலைத்து நிற்கும் துன்பச்சின்னங்கள் ...
துயரங்கள் நெஞ்சை வாட்ட
தோளைப் புத்தகச் சுமையது அழுத்த ......
இடிமேல் இடிகளா?
இது நம். தலைவிதியா?

சுரேஜினி செல்லையா
யா/கன்னியர்மடம் மகாவித்தியாலயம்

* * *

## எங்கள் தேவைகள் எங்கேயோ....

- இருண்டபாதையில்
எதையோ
தேடுவது போல்
எங்கள் கல்வி

- எஜமானர்கள்
எங்களை மேய்க்கிறார்கள்;
ச(ா)ட்டிவிடப்பட்ட
மந்தைபோல் நாங்கள் ......

- எங்கள் சிந்தையில்
சிக்கல்கள் திணிப்பு
"இப்படித்தான் செல்லுங்கள்"
என எங்களைப் பணிப்பு

- இந்த ஏட்டுக்கல்வியால்
என்ன பயன்?
நாட்டை ஆழ்பவன்
நலன் காக்கவா?

- அறிவுக்கும் ஆற்றலுக்கும்
அமைவான தொழில் வேண்டும்
அதில் நாடு முன்னேற
அழகான கல்விவேண்டும்,

க.ரட்ணேஸ்வரன்
மானிப்பாய் மெமோறியல் கல்லூரி

* * *

## தெரிந்துகொள்வோம்

- தென்னாபிரிக்காவில் கறுப்பர்களுக்கு சம வுரிமை வழங்கும் அரசியல் சட்டத்திற்கு நாடாளுமன்றில் ஒப்புதல் அளிக்கப்பட்டதினம்:
1993ம் ஆண்டு டிசெம்பர் 22 ஆகும்

- 'சிலியன் கவிக்குயில்' என்று போற்றப்பட்டு பின் அமெரிக்க சிஐஏ (CIA) சதியால் கொலை செய்யப் பட்ட புகழ்பெற்ற கவிஞர்:
'பப்லோ நிருடா' ஆவார்.

- ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் கௌரவ கலாநிதி பட்டம் பெற்ற இரண்டே இரண்டு சினிமாக் கலைஞர்கள்:
சார்லிசப்ளின், சத்யஜித்ரே.

- ரவீந்திரநாத் தாகூர் ஷேக்ஸ்பியரின் 'மாக்பெத்' நாடகத்தை வங்காளத்தில் மொழிபெயர்த்த போது அவருக்கு வயது: 14 ஆண்டுகள்

- இலக்கியத்திற்கான நோபல் பரிசை பெற்ற முதல் ஆசிய நாட்டவர்:-
'கவி' ரவீந்திரநாத் தாகூர். 1913 இல் (கீதாஞ்சலிக்காக)

- லிபியாவிலே 'முசோலினி'யின் இத்தாலிய ஆதிக்கத்துக்கு எதிராகப் போராடிய வயோதிபர்:-
'உமர்முக்தார்' (UMAR MUKHTAR) தனது 'SANSUI' இயக்கம் மூலம்.

- 'கியூப புரட்சிகர யுத்தத்தின் கதை' என்ற விடுதலைப் போராட்ட வரலாற்றை எழுதிய ஆஜன்ரீனவீரர்:-
மேஜர். ஏர்ணஸ்ரோ சேகுவேரா.

- ஈ. வே. ரா பெரியார் 19-5ல் உருவாக்கிய பகுத்தறிவுவாத இயக்கத்தின் பெயர்
சுயமரியாதை இயக்கம்;
இது திராவிட தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து செயற்பட்டது.

தொகுப்பு:- துரை. பிரஷாந்தன்,
யாழ் இந்துக்கல்லூரி, ஆண்டு - 11

# வைத்தியத்துறையில் மகத்தான சாதனை
# இதய மாற்றீடு

மோட்டார் கார்களிற்கு தேவையான போது உதிரிப்பாகங்களை எப்படி மாற்றுகின்றோமோ அது போல் எமது உடலிலும் மாற்றக்கூடிய 35 உதிரிப் பாகங்கள் இருக்கின்றன என்றால் அது இன்றைய வைத்திய உலகின் மகத்தான முன்னேற்றம் என்று சொல்லவும் வேண்டுமா? இன்றைய மனிதன் ஆடைகளை மாற்றுவதோடு மட்டும் நின்றுவிடாமல் இதயங்களையும், சிறுநீரகங்களையும் மாற்றுகின்றான். தென்னாபிரிக்க நிபுணரான பேராசிரியர் கிறிஸ்டியன். பேர்னாட் என்பவர் முதலாவது இதய மாற்றீட்டைச் செய்தார். பேராசிரியர் பேர்னாட் அமெரிக்க மருத்துவ நிலையங்களிலும், பின்னர் கேப்டவுண் மருத்துவ நிலையங்களிலும் நடைபெற்ற ஆராய்ச்சிகளின் போது நாய்களுக்கு மாற்று இதயங்களைப் பொருத்தி அவைகளை ஒரு வருடம் வரை இரவல் இதயங்களோடு வாழச் செய்திருக்கிறார்.

உலகிலே முதலாவது மனித இதய மாற்றீடு 1967ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 3ஆம் திகதி பேராசிரியர் கிறிஸ்டியன் பேர்னாட்டினால் செய்யப்பட்டது. இவ் இருதய மாற்றீட்டிற்கு உள்ளானவர் 53 வயதுடையவரான 'லூ பிவாஷின்ஸ்கி என்பவராவர். விபத்து ஒன்றில் சிக்கி மூளை சிதறி மரணமுற்றவரின் இதயம் வாஷின்ஸ்கியுக்குப் பொருத்தப்பட்டது. உறுப்புகளின் மாற்றீடு வெற்றிகரமாவதற்கு அவற்றின் பிறப்புரிமை ஒன்றுமையிலேயே தங்கியுள்ளது. எனவே வாஷின்ஸ்கியின் இழையங்களை இருதய தானம் செய்வோரின் இழையங்களோடு ஒப்பிட்டு பார்த்ததும் இழையுருப் பிரிவு ஒற்றுமை காணப்பட்டது. எனவே இதய மாற்றீட்டு அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

வைத்தியர்கள் இரு குழுவாகப் பிரிந்து இரு அறைகளைத் தேர்ந்தெடுத்து ஒரு அறையில் இதயம் பெறுபவரையும் மறு அறையில் இதயதானஞ் செய்பவரையும் வைத்து சிகிச்சை மூலம் வெளியில் எடுக்கப்பட்ட இதயத்தை வலி தொடர்பில்லாது வாஷின்ஸ்கியின் நெஞ்சறையில் பொருத்தப்பட்டது. முதலாவது இரவல் இதய மனிதரான வாஷின்ஸ்கி 18 நாட்கள் வரை உயிருடன் வாழ்ந்துவிட்டு பின் தனது நுரையீரல் அழற்சியால் (டபிள் நியூமோனியா) இறந்தார். வாஷின்ஸ்கிக்கும் பொருத்தப்பட்ட இதயத்தை பரிசோதித்தபோது அதில் எவ்வித தொற்றுதலோ அல்லது பழுதோ இல்லை எனக் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் எமது வைத்தியத் துறையே தொற்றுதலோ அல்லது பழுதோ ஏற்படாதிருக்கும் வகையில் செயற்கை இதயத்தை கண்டுபிடித்து விட்டது. இப் பெருமை 'றொபேட் யாவிக்'' என்பவரையே சார்ந்தது. இது அமெரிக்காவில் 1982ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டு வெற்றியளித்தமை குறிப்பிடத்தக்கது. இவ் இதயம் அலுமினியத்தினாலான, அடியையும் பிளாஸ்டிக்கினாலான அறைகளையும் கொண்டது. ஒவ்வோர் அறையிலும் வளையத்தக்க மென் தகடு உள்ளது. இது அழுக்கப்பட்ட வளியினால் செயற்பட்டு குருதியை பொறிமுறை வால்வுகளினூடு செலுத்தும்.

இப்போது இரத்த மாற்றீடு செய்வது உலக நாடுகள் அனைத்திலும் பிரபல்யமடைந்து விளங்குகின்றது. இவ் இரத்த மாற்றீடு செய்வதற்கு இரத்த சேமிப்பு வங்கிகள் உள்ளன. இதில் இரத்தம் சேமித்து வைப்பது போல் இன்னும் சில ஆண்டுகளில் இரவல் இதயங்கள் கிடைக்கும்போது அவற்றை சேமிப்பதோடு செயற்கை இதயங்களை உற்பத்தி செய்து சேமித்து ஓர் இதயவங்கியை திறப்பதன்மூலம் விஞ்ஞானம் இறப்பை மாற்றியமைத்துவிடும் என்று நம்பலாம்.

இதய மாற்றீடு மட்டுமன்றி எல்லா உறுப்பு மாற்றீடுகளும் வெற்றிகரமாக அமைந்து மிகப் பிரபல்யம் அடைந்து வருவதுடன் மேலும் இவ்வாறான சாதனைகளைச் செய்து முன்னேறிச் செல்வதற்கு இன்றைய அறிவியல் வைத்தியத்துறையானது முன்நிற்கின்றது என்பதில் சந்தேகமில்லை. எனவே இத்தகைய முன்னேற்றகரமான உலக அறிவியல் வைத்தியத்துறையின் போக்கிற்கு ஏற்றவாறு, தமிழ் மாணவர்களின் கல்வித் தரமும் மேம்பாடடைய முயற்சிகள் உடன் மேற்கொள்ளப்பட வேண்டும்.

செல்வி கே. றொபின்சனா
வேம்படி மகளிர் கல்லூரி
யாழ்ப்பாணம்

# துப்பாக்கிக் குண்டை துரத்தும் 'ஈ'

துப்பாக்கிக் குண்டையும் துரத்திப்பிடிக்கும் வேகத்தில் பறக்கும் ஈ ஒன்று இருக்கிறது. அதிவேக புகைப்படக்கருவியினால் மட்டுமே இதன் ஓட்டத்தைப் படம் பிடிக்கமுடியும். மான் ஈ (Deerfly) என்று அழைக்கிறார்கள். இதன் உயிரியல் பெயர் செஃபானோமியா (Cephanomiya) மணிக்கு 650 கி.மீ. வேகத்தில் பறக்கக்கூடியது. இதே வேகத்தில் இந்த ஈ உலகத்தைச் சுற்றினால் 10 மணித்தியாலதிற்குள் ஒரு சுற்று முடிந்துவிடும்.

தொகுப்பு - ப. நீலவண்ணன்,
யாழ் உடுப்பிட்டி அ. மி. கல்லூரி
ஆண்டு - 11



க. நகனேந்திரன்
பூநாறி மரத்தடி
கொக்குவில்

# வடமராட்சி கிழக்கில் போக்குவரத்து சீரின்மை கல்வியில் ஏற்படுத்தும் தாக்கம்

போக்குவரத்து சீரின்மை வடமராட்சி கிழக்கில் மாணவர் கல்வியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றபோதிலும், இது வெளிப்படையாகப் பார்க்கும்போது புலப்படுவதில்லை. வடமராட்சி கிழக்குப்பகுதி பாடசாலைகளில் வெளியிடங்களில் இருந்து வந்து கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களே பெரும்பான்மையாக உள்ளனர். அத்துடன் இவர்களில் அதிகமானோர் பெரிய வகுப்புக்களுக்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களாகவும் உள்ளனர்.

இங்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் பாடசாலை வெள்ளிக்கிழமை 2. 30 மணிக்கு விட்டவுடன் வாகனம்மூலம் வீட்டிற்குச் செல்வது வழக்கம். எனினும் தற்போது கிழக்குப் பகுதியில் போக்குவரத்து சீராக இடம்பெறாமையால் வெள்ளிக்கிழமை 12 மணிக்கு அல்லது ஒரு மணிக்கு பாடசாலையை விட்டு சைக்கிள் மூலமாக தங்களது வீட்டிற்குச் செல்ல வேண்டிய அவலநிலை தோன்றியுள்ளது. இதனால் திங்கட்கிழமை மீண்டும் பாடசாலைக்கு வரும்போது 20, 22 மைல் வரை சைக்கிள் ஓடி இங்குவர 10, 11 மணி ஆகிறது எனினும், இவர்களின் சைக்கிள் வரும்வழியில் பழுது ஏற்படுமாயின் அன்று முழுவதும் அவர்களது பாடநேரங்கள் கல்வி கற்பிக்கப்படாமல் போகின்றன. இதனால் மாணவர்களுக்குப் பாடத்திட்டம் முழுமையாக கற்பிக்காமையினால் பரீட்சையின் போது மாணவர்கள் குறைந்த புள்ளியையே பெற வேண்டியுள்ளது.

இது ஒரு புறம் இருக்க, வடமராட்சி கிழக்கில் பரவிவரும் மலேரியா, மற்றும் புதுவித காய்ச்சல் நோய் மாணவர்களை மட்டுமல்ல இங்கு கல்வி கற்பிக்கின்ற ஆசிரியர்களையும் தாக்குவதனால் பாடசாலையில் மாணவர் வரவும், ஆசிரியர் வரவும் கணிசமான அளவு குறைந்துள்ளது. இதற்கு அடிப்படைக் காரணம் கிழக்குப் பகுதிக்கு சுகாதார உத்தியோகத்தர்கள் உரிய மருந்துவகைகளை அனுப்புவது மிகவும் குறைவாக உள்ளமையாகும். அத்துடன் மருதங்கேணி வைத்தியசாலையில் அதிகமான நோயாளிகள் வரிசையில் நின்று மருந்து எடுக்கின்றனர். ஆனாலும் இங்கு அந் நோயாளிக்கு உண்மையில் மலேரியாதானா என்பதை அறிந்து மருந்து வழங்குவதற்கு உடனடி இரத்தப் பரிசோதனை நடாத்தப்படுவதில்லை. இரத்தத்தைக் குத்தி எடுத்து அது அனுப்பப்பட்டு அதற்கான முடிவு வரமுன்பு இவர்களுக்கு மலேரியா மருந்தை வழங்கும் ஒரு இக்கட்டான சூழ்நிலையும் தோன்றலாம்.

எனவே நோயாளிகள் வெளியிடங்களுக்குச் சென்று வைத்தியத்தைப் பெற்றுக் கொள்வதற்கு காலை 10 மணிக்குப் பின்பு வடமராட்சி கிழக்கில் எந்த ஒரு வாகனப் போக்குவரத்தும் கிடைப்பதில்லை. இதனால் இச் சீரற்ற போக்குவரத்து கல்வியை மட்டுமல்ல நோயாளர்களையும் காப்பாற்ற முடியாமல் இருப்பதற்கு அடிப்படைக்காரணமாக அமைகின்றது.

கல்வியில் ஏற்படும் தாக்கத்தைக் குறைத்துக் கொள்வதற்காக வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபரின் பணிப்பின் பெயரில் வடமராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கம் கட்டுப்பாட்டு விலையில் எரிபொருளை வழங்கியதன்மூலம் வடமராட்சி கிழக்கு வாகன சங்கத்தின் ஒத்துழைப்புடன் விசேட போக்குவரத்துசேவை ஒன்றை திங்கள், வெள்ளி ஆகிய நாட்களில் நடாத்திவந்தது. இது தற்போது நிறுத்தப்பட்டமையால் கல்வி நிலைமேலும் பின்நோக்கித் தள்ளப்படுவதுடன் எதிர்காலத்தில் கிழக்குப்பகுதி மாணவர்கள் க. பொ. த. (சாதாரணப்) பரீட்சையிலும் உயர் தரப் பரீட்சையிலும் குறைந்த வீதமானோரே சித்திபெற வாய்ப்புண்டு. எனவே இப்போக்குவரத்துச் சேவையைத் தொடர்ந்தும் ஒழுங்காக நடாத்த உரியவர்கள் ஆவன செய்வார்களாயின் மாணவர்களின் கல்வியைக் காப்பாற்ற முடியும் என்பது எனது கருத்தாகும்.

பொ. ஜெகதீஸ்வரன்
(வர்த்தகப்பிரிவு)
யா/உடுத்துறை மகாவித்தியாலயம்.

---

## உண்பதற்கு தனது தோலைத் தவிர வேறு இல்லை

கழற்றிப்போட்ட தனது மேற்தோலைத் தின்றே ஒருவருடம்வரை உயிர்வாழும் வண்டு ஒன்று உண்டு. கம்பளவண்டு (Anthrenus Scrophu Briae) என்றுபெயர். ஒரு கண்ணாடிக்குப்பியில் இந்த வண்டை அடைத்துவிட்டால் அது அப்படியே இடக்கிறது. சிறிது நாள் கழித்து தனது மேற்தோலைக் கழற்றி விடுகிறது. சிறிது சிறிதாக அதையே தின்று உயிர்வாழ்கிறது.

தொகுப்பு: சண்முகலிங்கம் ஜெயரூபன்,
யாழ் உடுப்பிட்டி அ. மி. கல்லூரி,
ஆண்டு 10

கவிதை

## எதனைத் தேடுகின்றீர்!

ஓ! மாணிடரே! .......
கடும் மழையையும், வரட்சியையும்
தாங்காது - நாணத்தால்
தலை சாய்த்து நிற்கும்
நெற் கதிர்களிடையே
எதனைத் தேடுகின்றீர்! ... ..
அந்நியன் பிடியிலிருந்து
(மருத) நிலம் காத்து ......
தமிழ் உள்ளங்களைக்
கோயில் கொண்ட,
மாவீரர்களின்!
பாதச் சுவடுகளையா?
இல்லை-
நெற்றி வியர்வை சிந்த
அயராது உழைத்து,
இன வெறியர்களின்
தாக்குதலுக்கு
இரையாகி - உம் இனம்
சிந்திய இரத்தக் கறைகளையா?
இல்லை-
கடும் சூறாவழியினால்
காய்ந்து சிதறுண்ட
நெல் மணிகளையா?
எவற்றைத் தேடுகின்றீர்

க. கலாநிதி
கரவெட்டி மத்தி,
கரவெட்டி.

## அறுவடை

பரம்பரை பரம்பரையாய் - தமிழர் குருதி
வியர்வையாய் ஊறிய மண்ணில் - செழிப்பில்
நிலம் தேடி விளைகின்ற நெற்கதிர்களை,
காவியப் பெண்களின் கைகள் ஏந்தும் அரிவாள்கள்
மூச்சாய் அரிபவை - நெற்கதிர்களை மட்டுமல்ல,
அடிமை வாழ்வையுந்தான்.

மண்ணையே தின்னவேண்டுமென்ற
டி பி யீடம் சொல்லுங்கள் - இங்கே
சுதந்திர உண(ர்)வு அறுவடை செய்யப்படுவதை
படுவான் கரையும், தம்பலகாமமும் எங்களதுஇரு
கண்கள் என்பதை-
இந்த அறுவடை நாளைய (உ)விதைகளை
பிரசவிக்கும் என்பதை!

கா, கஜந்தன்

## மாணவனே!

முன்னேறத்துடிக்கும் மாணவனே
உன்னை எல்லோரும் இகழ்கின்றனரோ
அதை விட்டுத்தள்ளு
மனிதன் ஒருவனைப் புகழ்வதும் இகழ்வதும்
ஆழ்ந்து சிந்தித்தல்ல.
உன் அங்கங்களில் குறையா
அதனையும் பொருட்படுத்தாதே
ஏனெனில்
இரவைப் பகலாக்கும்
மின்சாரத்தைக் கண்டுபிடித்த
எடிசனுக்கு காது கேளாதாம்.
உன்னிடம் வறுமையா
ஆபிரகாம் இலிங்கனும்
கொடும் வறுமையில்தான் படித்தான்.
உன் செயற்பாட்டுக்கு
உன் சூழல் வாய்ப்பில்லையென
எண்ணிடுகின்றாயா
ஓர் கணம் சிந்தி
செந்தாமரை சேற்றில்தான்
மலர்கிறது.
எனவே,
சூழலைப்பற்றி கவலைப்படாதே
உனக்குத் தேவையானது
விடாமுயற்சி.
உன் மனதிற்கு
துணிவு எனும் உரத்தை இடு.

வனஜா
சாவகச்சேரி.

## புனர் ஜென்மம்

"புன்னகை பூத்த சிட்டுக்களே"
புலியாய் பாய்ந்த மறவர்களே
வேள்வி வைத்து பாய்ந்தீரோ
வெண்புகையாய் மறைந்தீரோ
பூதலம் இருக்கும்வரை உம்புகழ் இருக்கும்
புனர்ஜென்மம் எடுப்பின் ஈழத்தில் மலர்வீர்
மக்களெல்லாம் வியக்கவைத்தீர்.
மாவீரர் என நாமம் கொண்டீர்
எதிரியை குதறி சென்றீரோ
ஏணியாய் பாதை அமைத்தீரோ
மரணம் உம்மை அழைக்கவில்லை - இந்த
மண்ணும் உம்மை மறக்கவில்லை.

ச. ஓம் சிவானந்தன்

# ஆங்கிலம் மொழி கற்போம்
## LANGUAGE — LEARN ENGLISH

### SCENE - EDUCATION CENTRE
### ENGLISH
### LESSON - FIVE

*We trust that you might have learnt with interest, the* **fourth** *lesson in English appeared in our last issue. In the same breath, we are commencing the* **fifth** *lesson. We earnestly welcome your comments regarding our English Lessons please.*

### இடம் - கல்வி நிலையம்
### ஆங்கிலம்
### பாடம் - ஐந்து

*எமது சென்ற இதழில் வெளிவந்த நான்காவது பாடத்தினை ஆர்வத்துடன் கற்றிருப்பீர்கள் என நம்புகின்றோம். அதேபோன்று ஐந்தாவது பாடத்தையும் தொடங்குகின்றோம். ''ஆங்கிலம் கற்போம்'' தொடர்பாக உங்கள் கருத்துக்களை வரவேற்கின்றோம்.*

("Necessity is the Mother of Invention") — (தேவைதான் புத்தாக்கத்தின் தாய்.)

| | | | |
|---|---|---|---|
| Selvan:- | Hello Bala! How are you? | செல்வன்:- | வணக்கம், பாலா! எப்படிச் சுகம்? |
| Bala:- | Very well. Thank you. How are you, Selvan? | பாலா:- | மிகவும் நலம் நன்றி உன் சுகம் எப்படி, செல்வன்? |
| Selvan:- | Very well. Thank you. | செல்வன்:- | நல்ல சுகம் நன்றி. |
| Bala:- | Come in. Please sit down. It has been a long time since we met each other. Where have you been all these years? | பாலா:- | உள்ளே வாரும். (தயவு செய்து) உட்காரும். நாம் ஒருவர் ஒருவரைச் சந்தித்து நீண்ட காலம். இவ்வளவு வருடங்களும் எங்கிருந்தீர், |
| Selvan:- | I have been in the Vanni area for the past three years. I have come here, now, on urgent business and I thought of paying you a visit. | செல்வன்:- | கடந்த மூன்று வருடங்களாக வன்னிப் பிரதேசத்தில் இருந்தேன் அவசிய அலுவலின் நிமித்தம் இப்பொழுது இங்கு வந்துள்ளேன உம்மையும் சந்திக்க எண்ணினேன். |
| Bala:- | It's very kind of you to have called on me. How did you find out my address? | பாலா:- | என்னைத் தேடி வந்ததையிட்டு உம் பெருந்தன்மையைப் பாராட்டுகிறேன். என் முகவரியை எப்படி நீர் அறியவந்தீர்? |
| Selvan:- | Your friend, Nades, directed me to this place. This is a spacious house. Is it rented out or is it your own? | செல்வன்:- | உம்முடைய நண்பன் நடேஸ் எனக்கு வழி காட்டினார். இது ஒரு விசாலமான வீடு. இது வாடகைவீடா, அல்லது உமக்குச் சொந்தமா? |

| | | | |
|---|---|---|---|
| Bala:- | This is my house, our ancestral home. My grand-father told me that his ancestors lived in this village for centuries, and that he had built this house with the hard-earned money. | பாலா:- | இது என் வீடு. எங்கள் மரபு வழிவந்த வீடு. இந்தக் கிராமத்தில் நூற்றாண்டு காலமாக தனது முன்னோர் வாழ்ந்தார்களெனவும், தான் கஸ்ரப்பட்டு உழைத்த பணத்தைக்கொண்டு இவ்வீட்டைக் கட்டினாரெனவும் எனது பேரனார் எனக்குச் சொன்னார். |
| Selvan:- | What was your grand-father? | செல்வன்:- | உமது பேரன் என்ன வேலை செய்தார்? |
| Bala:- | He was a farmer. He owned a few acres of land where he cultivated paddy and vegetable crops. My father and I cultivate this land now. | பாலா:- | அவர் ஒரு விவசாயி. சில ஏக்கர் காணி அவருக்குச் சொந்தமாயிருந்தது. அதில் வேளாண்மையும் தோட்டப் பயிர்களும் செய்து வந்தார். இப்பொழுது இந்நிலத்தில் நானும் என் தகப்பனாரும் பயிர் செய்து வருகிறோம். |
| Selvan:- | With the scarcity of kerosine, how do you manage to irrigate crops? | செல்வன்:- | மண்ணெண்ணைத் தட்டுப்பாட்டு நிலையில், உங்களால் எப்படிப் பயிர்களுக்குத் தண்ணீர் பாய்ச்ச முடிகிறது? |
| Bala:- | We have our traditional methods of watering. We have also adapted and developed new methods of irrigation. After all, "Necessity is the mother invention." | பாலா:- | தண்ணீர் பாய்ச்சும் பாரம்பரியமான வழி முறைகள் எமக்குண்டு. அவற்றை மாற்றி அமைத்ததுடன், தண்ணீர் பாய்ச்சும் புதிய முறைகளையும் நாங்கள் வழிவகுத்துள்ளோம். எதற்கும், "தேவைதான் புத்தாக்கத்தின் தாய்". |
| Selvan:- | In fact, Nades told me that you were very enterprising. I also heard that you had organised co-operative farms. | செல்வன்:- | ஆமாம், நீர் மிகவும் துணிவாண்மை உள்ளவரென நடேஸ் எனக்குச் சொன்னார். நீர் கூட்டுறவு முறையில் விவசாயம் செய்வதாகவும் நான் கேள்வியுற்றேன். |
| Bala:- | That's true. We work in our fields on a co-operative basis. We work as a team and we share the profit among ourselves. | பாலா:- | அது உண்மைதான். எங்கள் காணிகளில் நாம் கூட்டுறவு முறையில் வேலை செய்கின்றோம் எல்லோரும் ஒரு குழுவாகச் செயல்பட்டு அதனால வரும் இலாபத்தை எங்களுக்குள்ளேயே பகிர்ந்து கொள்ளுகிறோம். |
| Selvan:- | That's a good system. Keep it up. | செல்வன்:- | அது ஒரு சிறந்த வழி. அதைக் கைவிட்டு விடாதே. |
| Bala:- | You are also from a farming area. Why don't you come here tomorrow? We can have lunch together, and then, in the evening we can go round the farm. I shall be interested in getting your comments. | பாலா:- | நீரும் ஒரு விவசாயப் பிரதேசத்திலிருந்து வருகிறீர். நாளைக்கும் இங்கு வாவீர்களா? நாம் மதிய உணவை ஒன்றாய் உண்டு அதன்பின் மாலையில் கமத்தைப் பார்வையிடலாம். உமது அபிப்பிராயத்தைப் பெறுவதில் நான் கருத்தாயிருக்கிறேன். |
| Selvan:- | Thank you for the invitation. But, in the evening I will have to attend a ceremony at which I and five others will receive the national award for paddy cultivation, called "Paddy-king." Our national leader himself will present the awards. | செல்வன்:- | உம் அழைப்புக்கு நன்றி. ஆனால், மாலையில் நான் ஒரு விழாவிற்குச் சமுகமளிக்கவேண்டும். அதில், எனக்கும் மற்றும் ஐவருக்கும் "வேளாண் மன்னர்" என்னும் நெற்பயிர்ச் செய்கையின் தேசிய விருது வழங்கப்படும். அதனை நமது தேசியத் தலைவர் அவர்களே வழங்குவார். |
| Bala:- | My congratulations to you. Can I also join you? | பாலா:- | உமக்கு என் பாராட்டுக்கள்! நானும் உம்மோடு வரலாமா? |

(32 ஆம் பக்கம் பார்க்க)

# பொது அறிவுப்போட்டி - 4

1. சிந்தனைக் குழப்பம் (Thought Disturbance) என்பதுமனநோயின்-

    1) கடுமையான நிலை
    2) ஆரம்ப அறிகுறிகளில் ஒன்று
    3) சுகப்படுத்த முடியாதநிலை

2. வங்காள விரிகுடாவின் சராசரி ஆழம்-

    1) 39, 000 அடி  2) 14,764 அடி
    3) 2600 அடி

3. ப்ளெய்ஸ் செண்ட்ரார்ஸ் (Blaise Sendrars) என்பவர்-

    1) ஆபிரிக்கப்போராளிக் கவிஞர்
    2) பிரெஞ்சுக்கவிஞர்
    3) வியட்னாம் கவிஞர்

4. ஐ. பி. எம் (I. B. M) என்ற நிறுவனம் முதன் முதலாக கணனி மொழிபெயர்ப்புத் திட்டமொன்றை தயாரித்த ஆண்டு

    1) 1954  2) 1957  3) 1974

5. உலகின் பெரும்பாலான எரிமலைகள்-

    1) அமெரிக்காவில் உள்ளன
    2) இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் உள்ளன-
    3) பசுபிக் சமுத்திரத்தைச் சுற்றியுள்ள பிராந்தியங்களில் உள்ளன.

6. ஒளி மின்காந்தக் கொள்கையைக் கண்டுபிடித்தவர்

    1) நீல்ஸ் பின்கன்  2) மாக்ஸ்வெல்
    3) கிலாட்

7. "Search' என்ற ஆங்கிலச்சொல்லின் தமிழ் அர்த்தம்-

    1) ஆராய்ச்சி  2) தேடல்
    3) கண்டுபிடித்தல்

8. அன்னை பூபதி தியாக மரணமுற்ற நாள்-

    1) 19-03-1988
    2) 19-04-1988
    3) 31-03-1988

9. ஹேலிஸ் வால் நட்சத்திரம்-

    1) 50 வருடங்களுக்கொருமுறை வானில் தோன்றுகிறது
    2) 75 வருடங்களுக்கு ஒருமுறை வானில் தோன்றுகிறது
    3) 100 வருடங்களுக்கொருமுறை வானில் தோன்றுகிறது

10. தமிழில் எமக்குக்கிடைத்த முதல் நூலாகக் கருதப்படுவது-

    1) திருக்குறள்
    2) மகாபாரதம்
    3) தொல்காப்பியம்

இந்த பத்துக் கேள்விகளுக்கும் தரப்பட்டுள்ள விடைகளில் சரியானவற்றைத் தெரிவு செய்து தாமதிக்காமல் பொது அறிவுப்போட்டி, சாளரம், வேம்படி வீதி, யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள் கேள்விக்கான விடைகள் கடந்த சாளரம் இதழ்களிலேயே உள்ளன.

## ஏப்ரல் மாத பொது அறிவுப்போட்டி 3 க்கான விடைகள்

1. மாணவர்களுக்குப் பொதுவாக அரசியல் குறித்த சிந்தனை விளக்கம் என்பன தேவையானது

2. சமூகத்தின் வளர்ச்சிக்கான திட்டங்களால் மக்கள் அடைந்த இலாபங்களை பலாபலன்களை மாற்றங்களை சமூக அளவீட்டு முறை மூலம் இனங்காண முடியும். இம்முறையினையே அரசு, அரச சார்பற்ற நிறுவனங்கள் கையாளுகின்றன.

3) விண்வெளியில் முதன் முதல் பயணம் செய்தவர் யூரிககாரின்

4) மார்சல் ரிற்றோ யூகோஸ்லாவிய நாட்டு அரசியல் மேதையாவார்.

5) 1990 ஆம் ஆண்டு உலகக் கிண்ணததிற்கான உதைபந்தாட்டப் போட்டி நடைபெற்ற நாடு இத்தாலி

6) விரும்பிய மதத்தைப் பின்பற்றவும், ஆதரிக்கவும், விரும்பிய மொழியைப் பேசவும், விரும்பிய இடத்திற்குப் பிரயாணம் செய்யவும், விரும்பிய இடத்தில் வசிக்கவும் உள்ள உரிமைகள், மற்றும் எழுத்துரிமை, பேச்சுரிமை போன்றன குடியியல் உரிமைகள் எனப்படும்.

7) தமிழீழத்தில் முதன் முதலாக அமைக்கப்பட்ட சிறுவர் போசாக்குப் பூங்கா பொம்மை வெளியில் அமைந்துள்ளது.

8) திராட்சைப்பழம் காசேசியாவை தாயகமாகக் கொண்டதாகக் கூறப்படுகிறது.

9) ஓசோன் வாயுவை சோன்பீன் என்பவர் 1840 ஆம் ஆண்டில் கண்டுபிடித்தார்.

10) உலகிலேயே ஆழமானதும் பெரியதுமான கடல் பசுபிக்கடல்

போட்டியில் பங்குகொண்ட நூற்றுக்கணக்கான வாசகர்களில் சரியான விடைகள் எழுதி பரிசு பெறும் அதிஸ்டசாலிகளாகத் தேர்ந்தெடுக்கப் பட்டோர் வருமாறு-

முதலாம் பரிசு பெறுபவர்:-

கு. ராஜினி
ஆண்டு 11
யா/தம்பர்மலை அ. த. க. பாடசாலை,
வல்வெட்டித்துறை.

இரண்டாம் பரிசைப் பெறுபவர்:-

வேலுப்பிள்ளை சங்கீதா
ஆண்டு 6
யா/வரணி மகாவித்தியாலயம் வரணி.

மூன்றாம் பரிசைப் பெறுபவர்:-

பி. சுதர்சன்
ஆண்டு 9 B
புனித சாள்ஸ் மகாவித்தியாலயம்,
யாழ்ப்பாணம்.

இவர்களுக்கு எமது வாழ்த்துக்கள்!

யாழ் எழிலகம் வழங்கும் முறையே 250/= 150/= 100/= பெறுமதியான அன்பளிப்பு மடல்கள் இவர்களை வந்தடையும். அதனைக்கொண்டு விரும்பிய பொருட்களை எழிலகத்தில் இவர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

---

பாடசாலைகளின்... 11ஆம் பக்கத் தொடர்ச்சி

ஊர்காவற்துறைக் கோட்டம்

1) பெலிசியா பெலிக்ஸ் அல்பேட்
புனிதமரியாள் மகளிர் ம. வி.
2) புவனச்சந்திரன் ரவீந்திரன யாழ்ரன் கல்லூரி

வேலணைக் கோட்டம்

1) பரமானந்தன் சாயிநேசன் புங்குடுதீவு ம. வி.
2) பரஞ்சோதி குணதிபன
சேர். வைத்திலிங்கம் ம.வி.

கரவெட்டிக் கோட்டம்

1) சர்மிளா தவேஸ்வரன்
உடுப்பிட்டு மகளிர் கல்லூரி
2) சாந்தினி ஜெகநாதன்
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

பருத்தித்துறைக் கோட்டம்

1) கந்தசாமி யோகநாதன் ஹாட்லிக் கல்லூரி
2) சிவம் ராஜாராம் ஹாட்லிக் கல்லூரி

சாவகச்சேரிக் கோட்டம்

1) சாமுவேல் துஷ்யந்தன்
சாவகச்சேரி இந்துக் கல்லூரி
2) சுபாஜினி இராஜதுரை
சாவகச்சேரி இந்துக் கல்லூரி

மருதங்கேணி கோட்டம்

1) சிவமலர் வேலுப்பிள்ளை
ஆழியவளை சீ. சீ. த. க. பாடசாலை
2) துரைசிங்கம் விஜயபாஸ்கர்
ஆழியவளை சீ. சீ. த. க. பாடசாலை

தமிழீழத் தேசியப் பொதுக் கல்வித் தேர்வில் சிறப்புத்தேர்ச்சி பெற்ற மாணவர்களுடனான 'சாளரம்' கலந்துரையாடலின் இறுதிப்பகுதி அடுத்த இதழில் பிரசுரமாகும்.

---

ஆங்கிலம் கற்போம்... (30ஆம் பக்கத் தொடர்ச்சி)

| | | | |
|---|---|---|---|
| Selvan:- | I am permitted to take along with me a few special guests. So, you may also come along with me. Nades, too, will be there. | செல்வன்:- | ஒரு சில சிறப்பு விருந்தினர்களை என்னுடன் கொண்டு செல்ல எனக்கு அனுமதியுண்டு. எனவே நீரும் என்னுடன் வரலாம். நடேசும் அங்கு இருப்பார். |
| Bala:- | Thank you. Certainly. I will also be there. | பாலா:- | நன்றி கட்டாயமாக நானும் அங்கு வருவேன். |
| Selvan:- | I look forward to meeting you tomorrow. Bye. Bye! | செல்வன்:- | நாளைக்கு உம்மை நான் எதிர்பார்ப்பேன். போய் வருகிறேன்! |

முக்கிய குறிப்பு

- ஒரு சொல் பல கருத்துக்களைக் கொண்டிருக்காலம் எனவே அகராதியின் ஒரு சொல்லின் கருத்தைத் தேடுவதினால் நீங்கள் அதிக பயனடையலாம்.
- வார்த்தைக்கு வார்த்தை மொழிபெயர்ப்பது முறையல்ல. இது வெறும் சொற் பெயர்ப்பே என்பதை மனதில் கொள்ளவும்.



க. நகனேந்திரன்
பூநாறி மரத்தடி
கொக்குவில்

# மதுரம் தயாரிப்புக்கள்

பொருளாதாரத்தடை உடைத்து
பசியகற்றும் பணியில்
நாவுக்கு சுவையாக்கி
உடலுக்கு ஊட்டமளிப்பதுடன்
பிணிக்கு மருந்தாகிறது.

- குரக்கன் பணிஸ்
- வரகுப்பாண்
- குரக்கன் பிஸ்கட்
- கம்பு பிஸ்கட்
- கொக்கோ கிறீம் பிஸ்கட்
- தினை பிஸ்கட்

இவை மட்டுமல்ல
இன்னும் பல தந்து
உடலுழைப்பாளிகளின்
பலம் பெருக்குபவன்

இன்றே உங்கள் வளமான வாழ்வை நலமாக பேணிட
சுகாதார முறையில் தயாரிக்கப்பட்ட எமது உற்பத்திகளை
பாவித்து பயனடையுங்கள்.

**மதுரம்** பலாலி வீதி,
உரும்பிராய்.

# இலட்சுமி பாட்டா

## விற்பனையகம்

உங்கள் பாதங்களுக்கேற்ப நீண்டநாட்கள்
உழைக்கக்கூடிய பாதணிகள் எங்குமே
கிடைக்கவில்லையா?

**கவலையை விட்டுவிடுங்கள்**

ஆடவர்களே! நங்கையர்களே! முதியவர்களே!
சிறுவர், சிறுமியரே, மாணவ மணிகளே
நீங்கள் விரும்பிய ரகங்களில் உங்கள் பாதங்களுக்கு
இதமான பாதணிகளைத் தரமாக பெற்றுக்கொள்ள
இன்றே வாருங்கள்!

## இலட்சுமி பாட்டா

**விற்பனையகம்**

இல 47, புதிய அங்காடி, (உட்புறம்) யாழ்ப்பாணம்.